என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

உள்ளே

**பொங்கல்** சிறப்பு கட்டுரை

**நம்மாழ்வார்** பற்றிய கட்டுரை

January 2014

FREE ISSUE

# லண்டன் தமிழர் தகவல்

## London Tamil's Information



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர் தகவல்
## Tamil Information


பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2045

நந்தன - தை

மலர் : 10

இதழ் : 127

சனவரி - 2014



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!

## விளம்பர உண்மை...

தமிழர் தகவல் இதழில் வெளிவரும் விளம்பரங்கள் அனைத்தும் தரமானவை, உண்மையானவை என்பதை உறுதி செய்கிறோம்

தவறானவற்றை தமிழர் தகவல் வெளியிடாது






வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டன் செல்வ விநாயகர் கோயில் திரு செல்வராஜா அவர்கள்
தமிழினத்தலைவர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தபோது...
அவருடன் பேரா.சுப.வீரபாண்டியன் அவர்களும்





Book typing and layout
(English and Tamil)
Wrapper Design
Brochure Design
and Printing
Contact
ambika.siva5@gmail.com

அழைப்பிதழ்கள், நூல்கள், இதழ்கள்
வடிவமைக்க...
சிறந்த முறையில்
அச்சிட....
தொடர்பு கொள்ளுங்கள்
ambika.siva5@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன். தெய்வேந்திரம்
பிறப்பு - 20.03.1938
இறப்பு - 29.12.2013

# தொண்டுள்ளம் மறைந்ததே!

செயற்கரிய செயல்கள் செய்த பெரியவர் பொன்.தெய்வேந்திரம் அவர்கள், 29.12.2013 அன்று லண்டனில் காலமானார். அன்னார் இறைவனடி சேர்ந்தார் என்னும் செய்தி எம்மை வேதனையில் ஆழ்த்தியது. அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதலை அருளும்படி வேயுறுதோளி பங்கனை வேண்டுகிறோம்.

யாழ்ப்பாணம், உதும்பிறாயைச் சேர்ந்த பொன். தெய்வேந்திரம், 1962இல் லண்டனில் குடியேறியவர். 89இல் நான் லண்டனுக்குச் சென்றபோது, ஆர்ச்வே முருகன் கோயிலில், உயர்வாசல் குன்றில், அவரைச் சந்தித்தேன். அவர் சிறந்த பக்திமான். அந்த நாளில், அந்தக் கோயில் திருவிழாவில் சொற்பொழிவாற்றுவதற்காக, எனது உபயமாக, சரசுவதி இராமநாதனை அழைத்து வந்திருந்தேன். அன்றிலிருந்து, எனக்கும், பொன்.தெய்வேந்திரத்திற்குமான நட்பு தொடர்ந்தது.

ஒரு நாள் நான் சென்னையிலுள்ள என் வீட்டில் இருந்தபோது, அதிகாலை 4 மணிக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அழைத்தவர் பொன். தெய்வேந்திரம். 'நான் தெய்வேந்திரம் பேசுகிறேன். புது கோயில் கட்டப்போகிறோம். அதில் வைத்து வழிபடுவதற்கு மூன்று கடவுள் படங்கள் வேண்டும். உடனே வாங்கி அனுப்ப முடியுமா?' என்று கேட்டார். 8 மணிக்குப் புறப்பட்டுப் போய், அவர் கேட்ட படங்களைத் தேடிப்பிடித்து வாங்கி, 10 மணிக்கெல்லாம் கூரியரில் அனுப்பிவிட்டேன். அவர் மிகவும் நெகிழ்ந்து போனார். அந்தப் படங்கள் இன்றும் கனகதுர்கை அம்மன் கோயிலில் இருக்கின்றன. (அப்பொழுது எல்லாம் லண்டனில் கட்டப்பட்ட கோயில்களில், சாமி படங்கள்தான் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டிருந்தன. சிலைகள் கிடையாது. அவை பின்னாளில்தான் வைக்கப்பட்டன)

உயிர்வாழ்க்கைக்காக லண்டனில் குடியேறிவிட்டாலும், தாய் நாட்டை மறக்காத ஈழத்தமிழர்களில் பொன்.தெய்வேந்திரம் மிக குறிப்பிடத்தக்கவர். போரினால் பாதிக்கப்பட்டு, அனாதைகளாகிவிட்ட குழந்தைகளின் நலனில் மிகுந்த அக்கறை செலுத்திவந்தவர். லண்டனில் தரமான நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி நடத்தி, அதன் மூலம் நிதி திரட்டி அந்த அனாதைக் குழந்தைகளின் வாழ்வுக்காக அனுப்பி வைத்தவர். ஏதோ ஒரு முறை, இருமுறை அல்ல, தொடர்ந்து 25 ஆண்டுகள் இந்த செயற்கரிய தொண்டினைத் தன் வாழ்நாள் கடமையாகவே நினைத்துச் செய்தவர். இப்படியொரு சேவையை தனிமனிதனாகச் செய்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்றால், எனக்குத் தெரிந்து அப்படி எந்தத் தகவலும் இல்லை.

2007இல் திடீரென்று நெஞ்சுவலி வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நான் போய்ப் பார்த்து, 'திருச்செந்தூர் கோயிலில், சண்முகர் அர்ச்சனை செய்யுங்கள். விரைவில் முருகனின் அருளால் குணமடைவீர்கள்' என்றேன். என் சொல்லை மதித்து, என்னுடன் திருச்செந்தூர் வந்து, சண்முகர் அர்ச்சனை செய்து வழிபட்ட, அந்தப் பண்பினை எப்படி மறப்பது? முருகனின் அருளால் உடல் நலம் தேறி, வழக்கமான தன்னுடைய பணிகளைத் தொடர்ந்து வந்தார்.

ஓரிரு மாதங்களுக்கு முன் ஏற்பட்ட திடீர் உடல்நலக்குறைவால், 2 மாதங்கள் படுக்கையிலே இருந்து வந்தார். டிசம்பர் 29ஆம் தேதி, தன் அன்பு மனைவியையும், அருமைக் குழந்தைகள் மூவரையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மண்ணுலகில் இருந்து மறைந்துவிட்டார். அவருடைய நினைவுகள் என்றும் நம் நெஞ்சை விட்டு அகலா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறக்கணிப்போம்!

எத்தனை முறை எழுதுவது. எவ்வளவுதான் பேசுவது. ஆனாலும் எழுதித்தான் ஆக வேண்டும், பேசித்தான் தீர வேண்டும் என்னுமளவிற்கு முக்கியமான செய்திக்குத் திரும்பத் திரும்ப அழுத்தம் கொடுக்கத்தான் வேண்டியிருக்கிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் பல கட்டப் போராட்டங்களில் முக்கியமான ஒன்று, 'அந்நியப் பொருள்கள் பகிஷ்கரிப்பு'ப் போராட்டம் என்பதை அனைவரும் அறிவோம். இந்தியாவை தங்கள் வியாபாரத்திற்கான மிகப்பெரிய சந்தையாகத்தான் ஆங்கிலேயர்கள் முதலில் ஆக்கிக் கொண்டார்கள். அந்த அடித்தளத்தில் இருந்துதான் நாட்டை அடிமையாக்கும் எண்ணம் தோன்றி, வெற்றியும் பெற்றார்கள். எனவே இந்திய விடுதலைப் போரில், 'அந்நியப் பொருள்கள் பகிஷ்கரிப்பு' என்பது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது வரலாற்று உண்மை.

அந்த முறையை, இலங்கை சிங்கள அரசுக்கு எதிராக, புலம் பெயர்ந்த தமிழர்கள் கையாள வேண்டும் என்று நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். லண்டனில் ஒரு தமிழ் விளம்பர அறிக்கையிலும், 'ஸ்ரீலங்கா பொருள்களைப் புறக்கணிப்போம்' என்னும் வாசகம் இடம்பெற்றிருந்ததைப் பார்த்தேன். நில்கிரீஷ் என்ற பெயரில், உலகமெங்கும் கிளை விரித்திருக்கும் பல்பொருள் அங்காடியில், இலங்கைப் பொருள்கள் விற்கப்படுவதற்கும் இப்போது பலத்த எதிர்ப்புகள் வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன. இவை எல்லாம் சற்று ஆறுதலையும், மகிழ்ச்சியினையும் தருவதாக இருக்கின்றன!

இலங்கைப் பொருள்களுக்கு நாக்கு பழகிவிட்டது, ஏர் லங்கா விமானத்தில் போய் உடம்பு பழகிவிட்டது, பல ஆண்டுகள் பழக்கத்தை விடமுடியவில்லை என்று சொல்கின்ற ஈழத்தமிழர் ஒவ்வொருவரும், 'தாயகக் கனவினில் சாவினைத் தழுவிய' மாவீரர்களுக்குத் துரோகம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று பொருள். விலை மதிப்பில்லா உயிர்களையே தமிழீழ விடுதலைக்காக தந்தவர்கள் மத்தியில், கேவலம் ஒரு பழக்கத்தைக்கூட விடமுடியவில்லை என்பவர்களும் பிறந்திருப்பது தமிழீழ மண்ணின் தியாகத்திற்கே இழுக்கில்லையா?

இலங்கை சிங்கள அரசுக்கு அந்நிய செலாவணியைக் கொட்டித்தரும் 'காமதேனு' புலம் பெயர்ந்த தமிழ்மக்கள்தான் என்பதை நாம் உணரவேண்டும். எனவே தயவு செய்து, இலங்கைப் பொருள்களையும், ஏர் லங்கா விமானத்தையும் புறக்கணிப்பதோடு, அவரவர் வாழுகின்ற நாட்டில், இருக்கின்ற பகுதியில் பிற நாட்டினரிடமும் இலங்கைப் பொருள்களையும், ஏர் லங்கா விமான சேவையையும் புறக்கணிக்குமாறு பரப்புரை செய்வோம். இன்று உலக நாடுகளின் நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாமல், ராஜபக்சே அரசு திணறிக் கொண்டிருக்கிறது. அடிமேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும் என்பதைப் போல, அந்நிய செலாவணியும் முடங்கிப்போனால், சிங்கள இனவெறி ஆட்டத்திற்கு விரைவில் ஒரு முடிவு ஏற்படும் என்பது உறுதி!

இலங்கைப் பொருள்களைப் புறக்கணிப்போம்!

ஏர் லங்கா விமானத்தைத் தவிர்ப்போம்!

*(கையொப்பம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் எங்கள் திருவிழா



இந்தப் பொங்கல் திருநாள் மிகவும் முக்கியமான ஒரு நாள். இது அறுவடைத் திருநாள் என்பதால் நம் கலாச்சாரத்தில் இந்நாள் மிக முக்கியமான இடம் வகித்தது.

விவசாயி சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும். அந்த விவசாயிக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. நாம் உண்ணும் ஒவ்வொரு வாய் உணவிலும் – இந்த மண்ணிற்கும் நமக்கும், இந்த விவசாயத்திற்கும் நமக்கும், இருக்கும் தொடர்பை நாம் உணர்வுப்பூர்வமாகப் பார்க்கத் தவறி வருகிறோம், அது அரிதாகிக் கொண்டே வருகிறது. அறுவடைத் திருநாள் உருவாக்கப்பட்டதன் நோக்கமே இந்த தொடர்பை நாம் இழந்துவிடக் கூடாது என்பதை நாம் ஆணித்தரமாக உணர்வதற்குத்தான். செய்தித் தாளில் வரும் செய்தியை பார்த்துவிட்டு விவசாயிக்கு நினைவு மட்டுமே செலுத்தும் துர்பாக்கிய நிலைக்கு நாம் சென்றுவிட்டோம்.

விவசாயம் என்னும் செயலுக்கும் பல விலங்குகளுக்கும் ஆழமான தொடர்பு இருக்கிறது. நாம் உண்ணும் உணவிற்கு, நாம் உழும் மண்ணிற்கு சத்தூட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேண்டுமென்றால் அதில் விலங்குகளின் பங்கு மிக அதிகம் என்பது நமக்குத் தெரியும். இதனால் விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் ஆழமான பந்தம் உண்டு. இவ்விலங்குகள் இல்லாமல் நாம் வாழ முடியாது. ஆனால் நாம் இல்லாமல் அவர்களால் சிறப்பாகவே வாழ இயலும். நாம் இவ்வுலகில் இருக்கும் விதமே நம் நன்றியை அவர்களுக்கு வெளிப்படுத்தும் தினமாக இருக்க வேண்டும்.

நம் நாட்டில், நம் இயல்பு வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விழாவை நாம் உருவாக்கினோம். அதனுடன் அதற்கு உண்டான ஆட்டத்தையும் பாட்டத்தையும் இணைத்தோம். வாழ்கையே கொண்டாட்டமாக இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட அமைப்பு இது.

ஒரு காலத்தில், உழவு செய்வதற்கொரு பாட்டு, ஆட்டம், வழிபடுவதற்கு சில பூஜை முறைகள் என்று அமைத்து வைத்தார்கள். சரி, நாளைக்கு காளை வாங்க வேண்டுமா? அதற்கொரு கொண்டாட்டம், அதற்கொரு பாட்டு என்று வழி செய்து கொடுத்தார்கள். விதை விதைத்தால் அதற்கொரு பாட்டு, அறுவடை செய்தால் மற்றொரு பாட்டு இப்படி தினசரி வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு கொண்டாட்டத்தை அமைத்தார்கள். இவையெல்லாம், வெறும் கேளிக்கைகளாய் மட்டுமல்லாமல் அர்த்தமுள்ள கொண்டாட்டங்களாய் உருவாக்கப்பட்டன.

இவை தனி மனிதனின் வளர்ச்சிக்கும் மூலமாக இருககும்படி செய்தனர். நாம் செய்யும் செயல் சிறப்பாக நடைபெற வேண்டும், அதே சமயத்தில் அதனை ஆனந்தத்துடன் செய்ய வேண்டும் என்கிற ஆழ்ந்த அக்கறை ஒவ்வொன்றிலும் தொனித்தது. அதனால் ஓர் ஆண்டின் முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களும் திருவிழாக்களாகவே இருந்தன. வாழ்க்கையை ஒரு கொண்டாட்டமாகவே உருவாக்கினார்கள். அந்த வரிசையில் இந்தப் பொங்கல் திருநாள் மிக முக்கியமானது.

இந்த நன்னாளில் புது உலகம் படைக்க நாம் முயல வேண்டும். ஏதோ ஒரு பண்டிகைக் காலம் வரும்போது மட்டும் நாம் இப்படி இருப்பதல்ல, ஒவ்வொரு நாளும் இப்படிக் கொண்டாட்டமாகவே இருக்க வேண்டும்.

சமீபத்தில் உலகம் அழிந்துவிடும் என்ற செய்தி படுவேகமாக பரவியது. இதையே சாக்காக வைத்து நாம் புது உலகம் படைப்போம். அப்படிப் பார்த்தால் இதுப் புதுப் பொங்கல், முதலாவது பொங்கல். புது உலகில் அடியெடுத்து வைத்திருக்கும் நமக்கு இந்தப் பொங்கல் திருநாள் மிக முக்கியமானது.

தமிழ் மக்கள் அனைவருக்கும் என் இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வள்ளல்களுக்கெல்லாம்

# வள்ளல்



கொடை வள்ளல், பொன்மனச் செம்மல் என்றெல்லாம் போற்றப்படும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின் வள்ளல் தன்மை அனைவராலும் இன்றும் போற்றப்படுகிறது. எம்.ஜி.ஆரின் வள்ளல் குணம் குறித்துப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை பாராட்டியிருக்கிறார். யாரைப் பாராட்டினாலும், எதைப் பாராட்டினாலும் அந்தப் பாராட்டுரையில் பல செய்திகளையும் அரிய கருத்துகளையும் சொல்லிவிடுவது அண்ணாவின் தனித் தன்மை.

எம்.ஜி.ஆரை 'இதயக்கனி' என்று அண்ணா குறிப்பிட்டது எப்போது தெரியுமா? 1958 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடோடி மன்னன் திரைப்பட வெற்றி விழாவில் அண்ணா உரையாற்றியபோதுதான் அவ்வாறு குறிப்பிட்டார்.

'எம்.ஜி.ஆருக்கும் எனக்கும் இருக்கிற தொடர்பை நாடு அறியும். எம்.ஜி.ஆரைப் பாராட்டுவது –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னை நானே பாராட்டிக் கொள்வதாகக் கருதப்படும்.

உண்மைதானே!

எம்.ஜி.ஆர். என்றால் அவர் தாங்கியுள்ள கொள்கை எது என்பதை நாடு அறியும்.

முல்லைக்கு மணம் உண்டு என்பதைக் கூறிடவா வேண்டும்? இந்தக் கனி தங்கள் மடியில் விழாதா என்று பலர் எதிர் பார்த்தனர்.

அது என் மடியில் வந்து விழுந்தது. என் இதயத்தில் எடுத்து வைத்துக் கொண்டேன்!'

திராவிட நாடு இதழில் அண்ணா ஒரு முறை இவ்வாறு எழுதியிருந்தார்.

அறிவு மணம் பரப்புவதில் கழகம் கொண்டிருக்கும் ஆவல் பெரியதென்பதை நாடு அறியும். புது யுகத்தில் வளர்ந்து வரும் புதுமைகள் பல. எனினும் அவற்றின் சிறு ஒளி கூட நமக்குப் படாத அளவுக்கு அறியாமையும், பழமையும் நமது நாட்டில் படர்ந்து கிடக்கின்றன.

இந்தப் பழமையையும் அறியாமையையும் விரட்டியடித்திட வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. ஆனால் அந்தப் பணிக்குச் சமூகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்களாக விளங்கிடும் பெரிய மனிதர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது கண்கள் குளமாகும்; வேதனை வெள்ளமாகும். மேட்டுக் குடியினர் தங்கள் மேனி சிறந்திடச் செலவழித்திடும் பணத்தில் ஒரு பகுதியையாவது அறிவு வளரும் நற்பணிக்குச் செலவழிக்கிறார்களா என்றால் கிடையாது.

பெரிய மனிதர்கள் என்று உலவிடுவோர், தங்கள் கையில் சிக்கிக்கொண்ட செல்வத்தின் ஒரு பகுதியையேனும் செலவழித்து, ஒரு சிலரது பசியைத் தீர்த்தால் என்ன? சில பள்ளிகளைக் கட்டி அறிவு மனம் ஓங்கச் செய்தால் என்ன என்று நல்லோர் பலரும் கேட்டு அலுத்துவிட்ட நிலைதான் தாண்டவம் ஆடுகிறது.

"பணம் சம்பாதித்து அதனைச் சேர்த்து வைத்துச் சிரமப் படுவதைப் பார்க்கிலும் அதை நல்ல வழியில் செலவிடும்போது ஏற்படும் ஆனந்தம் மிகப் பெரியது."

அதனைக் கவன மூட்டுபவர் போல், உழைப்பின் பலனை நல்ல பல நற்பணிகளுக்குச் செலவிட்டு வருபவர் தோழர் எம்.ஜி. இராமச்சந்திரன்.

அவர் தம்முடைய சக நடிகர்களிடம் நடந்துகொள்வது பற்றியும், வறியோரைக் கண்டால் அவர் காட்டும் அன்பு குறித்தும் பலர் என்னிடம் கூறுவதுண்டு. அதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. ஏனெனில் அன்பு காட்டவே பிறந்த இதயம் அவருடையது. அவரைப் போன்றவர்கள், எப்போதும் நல்ல காரியங்களுக்காகவே தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்கள்.

புரட்சி நகர் பண்பு:

'புரட்சி நடிகர்' என மக்கள் போற்றவும், நல்லவர் என நண்பர்கள் வாழ்த்தவும், தொழிலாளர்களின் தோழன் என சமூகத்தவர் களிக்கவுமான எம்.ஜி.ஆர். அவர்கள், அண்மையில் சென்னை தியாகராயர் கல் லூரிக்கு ஐம்பதாயிரம் ரூபாய்களைத் திரட்டித் தந்தார் என்பதைக் கேள்வியுற்று மகிழ்ந்தோம்; பரவசப்படுகிறோம். பணத்தைச் செலவழிக்கும் வகைகளை அறிந்து பணியாற்றிடும் அவர் குணம் கண்டு, அவருடைய பண்பைப் பாராட்டும் வகையில், தியாகராயர் கல்லூரியினர் சில நாட்களுக்கு முன்பு, தலைமையில் என்னைக் கொண்டு, எம்.ஜி.ஆர். அவர்களின் படத்தைத் திறந்து வைக்கச் செய்தனர்.

'கூத்தாடிகள்' 'நாடகமாடிகள்' என்று ஏளனமாகப் பேசபட்ட நிலை மாறி, அவர்களது திருவுருவங்கள், கல்லூரிகளில் வைக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டு வருவது கண்டு மகிழ்கிறோம்.

பணம் வருவது கடினம். அப்படி வருகின்ற பணத்தை வகையறிந்து செலவழிப்பது மிக மிகக் கடினம். அதுவும் நடிப்புலகில் இது மிக மிகக் கடினம்.

இருந்தும், பணத்தை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்திடும் கண்மணியாக இருந்திடும் எம்.ஜி.ஆர். நம்மவராக இருப்பதில் நமக்கு ஒரு பெருமை இருக்கிறது.

இருக்கின்ற இடத்திற்கும் தனக்கும் பெருமை தேடித் தரும் புரட்சி நடிகர் வாழ்க! வளர்க அவர்தம் பணி!

*(திராவிட நாடு கிழமை இதழ்: ஏப்ரல் 13, 1958)*

1961 ஆம் ஆண்டு ரிக்சா தொழிலாளர்களுக்கு மழைக்கோட்டு வழங்கும் விழாவில் அண்ணா குறிப்பிட்டார்.

'புயல் மழையால் சேதம் வரும் இடங்களில் எல்லாம் எங்கள் புரட்சி நடிகர் உதவியினைக் காணலாம்.

தன்னைத் தேடி வருகிறவரின் கண்ணீரைத் துடைக்கிறவன் வள்ளல். தன்னைத் தேடி வருகிறவரின் துன்பத்தைப் போக்குகிறவன் வள்ளல்.

ஆனால் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அப்படியல்ல; சமுதாயத்தில் துன்பப்படுகின்றவன் எங்கே இருக்கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தேடிப் போய், அவன் கண்ணீரைத் துடைத்துக் கைகொடுக்கிற எம்.ஜி.ஆர். வள்ளளுக்கெல்லாம் வள்ளல்! '

*1955*ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் நாடு பெரும் பேரிடரைச் சந்தித்தபோது கலைத் துறையினர் பெரிய அளவில் நிதி திரட்டி உதவினார்கள். திராவிடர் நாடு இதழில் அது குறித்து அண்ணா எழுதியபோது எம்.ஜி. ஆரைப் பற்றி அவர் குறிப்பிட்டிருந்த பாராட்டு மொழிகள் எம்.ஜி.ஆருக்குப் பெரும் புகழைச் சேர்த்தன.

'புயலின் கொடுமைக்கு உள்ளானோர்க்கு உதவிடும் பொருட்டு, நிதி திரட்டத் தொடங்கினர். தொடக்கக் கூட்டமே வெற்றி அளித்திருக்கிறது. தொடர்ந்து பணியாற்றுபவர். அவர்தம் பணியின் பலன் – அழிந்தது போக மீதம் இருக்கும் வலிவு கொண்டு, வாழ்வுடன் போராடி, உழைப்பால் மீண்டும் பொலிவு பெறும் ஏழை எளியவருக்கான குடில்களாகக் காட்சி தரட்டும்; அழிவு தோற்று ஓடட்டும்! நாசத்தின் கோரப் பற்களால் ஏற்பட்ட புண் ஆற்றிடும் மாமருந்து கிடைக்கட்டும்.

நம் அருமருந்தன்ன நண்பர் எம்.ஜி.இராமச்சந்திரன், மதுரையம்பதி கடை வீதியில் சென்று, கை ஏந்தி நின்று, பணமும் பண்டமும் கேட்டுப் பெற்று உதவினார் என்றோர் செய்தி கேட்டு–

இத்தகு இதயம் படைத்தவரை, நண்பராகப் பெற்றிருக்கிறோமே–

நமது கழகத்தினராகவும் கொண்டிருக்கிறோமே – என்பது

எண்ணிப் பெருமைப்படுகிறேன்... பெருமைப்படுகிறேன்!'

ஈழப்போராட்டத்திற்கு எம்.ஜி.ஆர். எவ்வாறெல்லாம் உதவினார் என்பது அண்மைக் காலத்தில் அவரைப் பற்றி அதிகம் பேசப்படும் செய்தியாகும்.

எத்தனையோ சிறந்த பண்புகளையும், திறமைகளையும் எம்.ஜி.ஆர். கொண்டிருந்தாலும், அவருடைய கொடைத் திறன் மட்டும் அவருக்கான தனி அடையாளமாக நிலைத்து நிற்கும் என்று சொன்னால் மிகை யாகாது.


**தமிழர் தகவல் இதழின்**
**பொங்கல் சிறப்பு வெளியீடு**
**32 சிறுகதைகளுடன்**
**தயாராகிறது**

**தேவைக்கு**
**வாசகர்கள்**
**தமிழர் தகவலைத்**
**தொடர்புக்கொள்ளுங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமருந்தாகும் அற்புத மலர்கள்

மலர்களின் மருத்துவ குணங்கள் உண்மையாகவே நம்மை வியக்க வைக்கும். பூக்களின் அழகும், நறுமணமும் எத்தகையோரையும் மயக்கும் தன்மை கொண்டவை. பூக்களில் மறைந்துள்ள மருத்துவத் தன்மைகளை நன்கு அறிந்து வைத்திருந்தவர்கள் நம் முன்னோர்கள். பழவகைகளைப் போல, காய்கறிகளைப் போல, கீரைவகைகளைப் போல, பச்சிலையைப் போல, பூக்களும் நோய் நீக்கும் மருந்துகளாக ஆயுர்வேதத்திலும் யுனானி வைத்தியத்திலும் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன. தமிழர்களின் மரபுவழி மருத்துவமான நாட்டு மருத்துவத்திலும் மலர்கள் பெரிதும் பயன்படுகின்றன.

எல்லா மலருக்குள்ளும் ஏதோ ஒரு மருத்துவ குணம் இருந்தாலும்,, அவற்றுள் ஒரு சிலமலர்களையும் அவற்றின் மருத்துவத் தன்மைகளையும் நாம் அறிந்து கொள்வோம்.

மல்லிகைப்பூவை அந்தக் காலத்திலேயே பல்வேறு பிரச்சினைகளுக்கு மருந்தாகப் பயன் படுத்திவந்தனர். மல்லிகைப் பூ எண்ணெய் சிறந்த மருந்தாகப் பயன்படுத்தப் படுவதுண்டு.

வெளியிடங்களில் உணவை வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கு வயிற்றில் பூச்சித் தொல்லைகள் அதிகமாக இருக்கும். வயிற்றில் பூச்சி இருந்தால் உடல் மெலியும், சருமத்தில் வெள்ளைத் திட்டுக்கள் காணப்படும். அப்படியானவர்கள் 4 மல்லிகைப்பூவை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்த நீரை அருந்தி வர வேண்டும். இவ்வாறு அருந்தி வர, வயிற்றில் உள்ள கொக்கிப் புழு, நாடாப் புழு போன்றவை அழியும்.

இதேபோல, மல்லிகைப்பூக்களை நிழலில் வைத்து உலர்த்தி, அவை காகிதம் போல ஆனதும், அவற்றை அரைத்துப் பொடி செய்து தண்ணீரில் கலந்து குடித்து வர, சிறுநீரக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கள் தானாகவே கரைந்து போகும். னுந்த உயர் சிகிச்சையும் தேவைப்படாது.

நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்கள் மல்லிகைப் பூக்கள் ஒன்றிரண்டை உண்டு வர நோய் எதிர்ப்புச் சக்தி உயரும்.

சிலருக்கு மல்லிகை வாசனை தலைவலியை ஏற்படுத்தும். ஆனால் தலைவலியை குண மாக்கும் குணம் மல்லிகைக்கு உள்ளது என்பது பலருக்கும் தெரியாது. தலைவலி ஏற்படும் போது, சில மல்லிகைப் பூக்களைக் கையில் வைத்துக் கசக்கி அதனை தலையில் பத்திடுவது போல தேய்த்துவிட்டால் தலைவலி காணாமல் போகும்.

மல்லிகைப் பூவில் இருந்து ஒரு வகை எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் பல்வேறு உடல் உபாதைகளுக்கு அருமருந்தாக உள்ளது. எங்கேனும் அடிபட்டு அல்லது சுளுக்குப் பிடித்து வீக்கம் காணப்பட்டாலும், நாள்பட்ட வீக்கமாக இருந்தாலும், மல்லிகைப் பூவை அரைத்துப் பூசினால் வீக்கம் குறையும்.

மன அழுத்தம், உடல் சூடு போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள், ஒன்றுமே செய்ய வேண்டாம். அவர்களுக்குப் பிடித்த அளவிற்கு மல்லிகைப் பூவை வாங்கித் தலையில் சூடினால் போதும். மன அழுத்தமும் குறையும், உடல் சூடும் குறையும். இதுபோன்ற பல மகத்துவங்களைக் கொண்டுள்ளது மல்லிகை பூ.

மல்லிகைப் பூவைப் போலவே சிறந்த மருத்துவ குணம் மிகுந்த இன்னொரு பூ ஆவாரம் பூ. அது உயிர் காக்கும் மருந்தாகும்.

'ஆவாரை பூத்திருக்க சாவாரைக் கண்டதுண்டோ!' என்பது தமிழ் நாட்டில் வழங்கப்படும் பழமொழி. மஞ்சள் நிறத்தில் கொத்துக் கொத்தாய்ப் பூத்துக் குலுங்கும் ஆவாரம் பூவின் செடி, குத்துச்செடி இனத்தைச் சேர்ந்தது. இதனை ஆவரை, ஆவிரை, ஏமபுட்பி, மேகாரி, ஆகுலி, தலபோடம் எனப் பல பெயர்களில் அழைக்கின்றனர்.

நீரிழிவு நோய், சருமத்தில் உண்டாகும் வறட்சி, சருமத்தில் உப்புப் படிதல் மற்றும் வியர்வையால் உண்டாகும் துர்நாற்றம் இவைகளை நீக்கி, தங்கம் போன்ற மேனியைக் கொடுக்கும். ஆவாரம் பூ நரம்பிலுள்ள உப்புத் தன்மையை நீக்கும் தன்மை கொண்டது.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த, அன்றே நம் சித்தர்கள் கண்டறிந்து கூறியுள்ள மூலிகைகளுள் ஒன்று ஆவாரம் பூ. ஆவாரம் பூவின் இதழ்களை நிழலில் உலர்த்திப் பொடி செய்து, காலை, மாலை என இருவேளையும் அருந்தி வந்தால் நீரிழிவு நோய் கட்டுக்குள் இருக்கும். சர்க்கரையைக் குறைக்க ஆவாரம் பூ சிறந்த மருந்தாகும். ஆவாரம் பூ, குப்பை மேனி இலை, பூவரசு இலை, செம்பருத்தி இலை ஆகியவற்றைச் சம அளவு எடுத்து, அரைத்துச் சருமத்தில் முழங்காலுக்குக் கீழே பூசி வந்தால், நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட கால் பகுதி உணர்ச்சி பெறும்.

ஆவாரம் பூவைக் காய வைத்துப் பொடி செய்து, அதனைத் தேன் கலந்து தினமும் காலை வேளையில் சாப்பிட்டு வந்தால் மேனி தங்கம்போல் பளபளவென்று இருக்கும். சரும நோய்கள் ஏதும் அண்டாது.

சிலருக்கு வியர்வையில் கற்றாழை நாற்றம் கலந்து வீசும். இதனால் இவர்கள் அருகில் யாரும் இருக்க மாட்டார்கள். இந்தக் கற்றாழை நாற்றத்திற்குக் காரணம் உடலில் உள்ள வியர்வைத் துளைகளில் படிந்துள்ள கிருமிகளே. இவர்கள் ஆவாரம் பூவை நிழலில் உலர்த்திப் பொடி செய்து அதனுடன் பனை வெல்லம், சுக்கு சேர்த்துக் கஷாயமாக்கி, தினமும் இருவேளை டீ போல அருந்தி வந்தால், வாசனை திரவியம் இன்றி மேனி நறுமணம் வீசும். சிலருக்கு உடம்பில் வியர்வை அப்படியே படிந்து உப்புப் படிவமாக மாறும். உடலெங்கும் வெள்ளைத் திட்டுக் களாகப் படிந்து இருக்கும். இவர்கள் ஆவாரம் பூவைக் காயவைத்துப் பொடி செய்து அதனுடன் சீயக்காய்த்தூள் சேர்த்து, குளிக்கும் முன் உடலெங்கும் பூசி, சிறிது நேரம் கழித்து குளித்து வந்தால் உடம்பில் உப்பொரிதல் மாறும். உடல் சூட்டால் பித்தம் அதிகரித்து உடலில் இரத்தம் மாசடைந்து நோய்கள் பல ஏற்பட வாய்ப்பாகிறது. இந்த உடல் சூடு தணிய ஆவாரம் பூவை நிழலில் உலர்த்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொடி செய்து வைத்துக் கொண்டு தினமும் காலையில் கஷாயம் செய்து அருந்தி வந்தால் உடல் சூடு படிப்படியாகக் குறையும்.

ஆவாரம் பூவைக் காயவைத்து அதனுடன் சீயக்காய், சிறுபயறு சேர்த்து அரைத்து தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் தலைமுடி உதிர்வது குறைந்து கூந்தல் நீளமாக வளரும்.

முருங்கைப்பூ: பித்தம் நீக்கும். வாந்தி குணமாகும். கண்கள் குளிர்ச்சி அடையும். காம உணர்வுவை அதிகமாக்கும்.

செந்தாழம்பூ: தலைவலி தீரும். கபம், ஜலதோசம், வாத நோய் ஆகியவை அகலும். உடலுக்கு அழகு அளிக்கும்.

அகத்திப்பூ; பீடி, சிகரெட், சுருட்டு, உக்கா போன்றவற்றைப் பிடிப்பதால் ஏற்படுகின்ற விச சூட்டையும், பித்தத்தையும், வெயிலினால் உண்டாகும் சூட்டையும் நீக்கும்.

இலுப்பைப்பூ: நல்ல சுவையுடைய இப்பூவினால் பாம்பு விஷம், வாத நோய் குணமாகும்.

புளியம்பூ; மலையைச் சார்ந்த காட்டில் முளைக்கும் இப்பூவினால் பித்த நோய், சுவையின்மை, வாந்தி ஆகியவை தீரும்.

மாதுளம்பூ: அனல் பித்தம், ஏப்பம், வாந்தி, இரத்தமூலம் ஆகிய நோய்கள் நீங்கும். இரத்தம் மிகுதியாகும். உடலுக்கு ஊட்டம் அளிக்கும்.

வேப்பம்பூ; நாள்பட்ட பூவினால் ஏப்பம், சுவையின்மை, மலப்புழுக்கள், நாக்கு நோய்கள், ஜன்னி ஆகிய நோய்கள் தீரும்.

பனம்பூ: பல் நோய், சிறுகட்டு, வாத குன்மம், நாள்பட்ட சுரம் ஆகியவை தீரும்.

முள்முருக்கம்பூ: சூத(ல)க கட்டு (மாதவிலக்குத் தடை) நீங்கும்.

வாழைப் பூ : சீதபேதி, இரத்தமூலம், பால்வினை நோய், வெள்ளைப்பாடு, இருமல், உடற்சூடு, கைகால் எரிச்சல் ஆகியவை குணமாகும். விந்து விருத்தியாகும்.

தென்னம்பூ; பால்வினை நோய், வெள்ளை ஒழுக்கு, உடலில் உள் கொதிப்பு, இரத்தப் போக்கு, விஷக்கடி நோய்கள் நீங்கும்.

சூரிய காந்திப் பூவைப் பொருத்தவரை அதன் விதைகளே பெருமளவு உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன. இனிப்புச் சுவையுடன் உடலுக்கு அவசியமான பல்வேறு சத்துகள் இதில் அடங்கி உள்ளன. அதிகமாக இவ்வாறு அருமருந்தாகும் ஏராளமான அற்புத மலர்களை இயற்கை நமக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. நறுமணம் தந்து நம் உள்ளத்தை இதமாக்கும் இம் மலர்கள் நம் உடலையும் மனதையும் நலமாக வைத்திருக்க உதவுகின்றன. உடலும் உள்ளமும் நலமாக இருந்தாலே நமக்கு மகிழ்ச்சி தானே! மல்லிகையும் ஆவாரம் பூவும் மட்டுமல்ல, உணவாக நாம் கொள்ளும் சில மலர்கள் மட்டுமல்ல, முன்பே நாம் குறிப்பிட்டது போல, எல்லா பூக்களுக்குள்ளும் மருத்துவ குணங்கள் உள்ளன என்பதை அறிந்து, அவற்றைப் பயன்படுத்தி வந்தவர்கள் நம் மூத்த தலைமுறையினர். ஆனால், நாம்தாம் கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்து கொண்டிருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டினால் சிறந்த தொண்டன்



இலங்கைத் தமிழ்மக்களின் மனங்களில் நீங்காமல் நிற்கின்ற சேர் பொன் இராமநாதனின் நிறைந்த செயல்களில் முதன்மையானவை அவர் உருவாக்கிய கல்வி நிறுவனங்கள். ஆண்களுக்காக திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியையும் பெண்களுக்காக மருதனா மடத்தில் இராமநாதன் கல்லூரியையும் நிறுவினார். நூற்றாண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட இந்தக் கல்லூரிகளில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக பரமேஸ்வராக் கல்லூரி 1975இல் மூடப்பட்டு விட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பிரிவு இராமநாதன் கல்லூரியின் ஒரு பகுதியில் நிறுவப்பட்டாலும் மகளிருக்கான அந்தக் கல்வி நிறுவனம் தொடர்ந்தும் செயற்பட்டு இந்தமாதம் தனது நூற்றாண்டு விழாவினைக் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டுள்ளது.

தொண்ணூறுகள் வரையும் இராமநாதன் கல்லூரியில் குடாநாட்டைச் சேர்ந்த உயர்ந்த குடும்பங்களின் பெண்பிள்ளைகள் சைவப்பாரம்பரியமிக்க சூழலில் கல்வி கற்பதற்காக விரும்பிச் சென்றார்கள். ஆனால் போரும் இடப்பெயர்வுகளும் தமிழ் மக்களின் கல்வியைப் பாதித்தது போலவே நல்ல கல்விநிறுவனங்களையும் பாதித்து விட்டது. அப்படியாகப் பாதிக்கப்பட்ட கல்லூரிகளில் இராமநாதன் கல்லூரி குறிப்பிடத் தக்கது. யாழ்ப்பாணக் குடாநாட்டினர் பெருமளவில் புலம்பெயர்ந்த காரணங்களால் உயர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் வருகை இல்லமலே போய்விட்டது. இதன் காரணமாக வெளவேறு பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களின் பிள்ளைகளும் போரின் பின்பாக வன்னியிலிருந்து வந்த கஷ்டமான பிள்ளைகளும் படிக்கும் கல்லூரியாக இராமநாதன் கல்லூரி மாறியதில் வியப்பில்லை. இதனாலோ தெரியாது உள்ளூரிலும் புலம்பெயர் மண்ணிலுள்ளவர்களும் தங்களின் கண்களை மூடிவிட்டனர்.

சென்ற ஆண்டு இராமநாதன் கல்லூரிக்குச் சென்ற ஒருவரின் கண்களை பராமரிபாரற்ற 'வசதிகள் குறைந்த' இந்தக் கல்லூரியின் நிலை கண்களைக் குழமாக்கியது. இங்கே திரும்பி வந்தவர் தன்னுடைய நண்பர்கள், கோவில்கள், பொது நிறுவனங்கள், பழைய மாணவிகள் என பல தரப்பினருடன் தொடர்புகளை ஏற்படுத்தி திட்டங்கள் தீட்டினார். நிதி திரட்டினார். பழைய மாணவிகளும் டாக்டர் நவரத்தினம் போன்றோரும் முன்நின்று ஒத்துளைத்தனைர். இரண்டு தடவைகள் அங்கு சென்று (6 மாதங்கள்) தானே வெய்யிலிலும் மழையிலும் நின்று மேற்பார்வை செய்து இந்தக் கிழமை நூற்றாண்டு விழாவைக் குதூகலமாகக் கொண்டாடும் இராமநாதன் கல்லூரியை ஓரளவுக்குப் புனரமைக்கப்பட்டதாக, வளங்கள் சில பெற்றதாக மாற்றினார். இதனை யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் பார்த்துப் பாராட்டுகிறது.

இந்தத் தொண்டன் வேறு யாருமல்ல. லூயிசத்தில் சிவன் கோவிலை உருவாக்கிய திரு நடராஜா சச்சிதானந்தனே. தமிழரின் கல்வியில் அக்கறை கொண்ட அனைவரும் இந்த அற்புதமான தொண்டனை வாழ்த்துவோம்.

**சி நாகலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கலோ பொங்கல்

- ஞான. அய்யாபிள்ளை

பொங்கல் உழவர் திருவிழா. உணவு உற்பத்தியில் ஈடுபடும் உழவர்கள் தங்களுடைய உழைப்பின் பயனை அறுவடை செய்கின்ற பொழுது, அந்த உற்பத்தியில் பங்கு பெற்ற உற்பத்திக் காரணிகளான சூரியன், காற்று, மழை, கலப்பை, ஏர் மாடுகள் அத்தனைக்கும் நன்றி தெரிவிக்கிறார்கள். நான்கு நாள்கள் தமிழக உழவர்களால் கொண்டாடப்படும் இத்திருவிழா எந்த வகையிலும் நகர வாழ்வோடு தொடர்புடையது அன்று. இந்து மதம் சார்ந்த விழா என்று தாராளமாக வரையறை செய்தால் கூட, அந்த வரையறைக்குள்ளும் வருவதில்லை. இந்து மத அவதார அம்சங்கள் ஏதும் பொங்கலில் இல்லை; நிறுவனப்படுத்தப்பட்ட கடவுள் தன்மை ஏதும் பொங்கல் விழாவில் இல்லை. மறு உலக மேன்மை, ஆன்மீகத் தேடல் என எதுவுமே பொங்கலில் இல்லை.

வேளாண்மைச் சமூகத்தின் வழமைத் திருவிழாவே பொங்கல். பொங்கலை உழவர் திருநாள் என திராவிட இயக்கத்தவர் ஏற்றாலும், தமிழர் திருநாளாகப் பொங்கல் விழாவை மறுகட்டமைப்புச் செய்வதில், சென்றநூற்றாண்டின் பிற்பகுதியில் பெரிய முயற்சி செய்து ஓரளவு வெற்றியும் கண்டனர். சங்ககால இலக்கியங்களான புறநானூறு மற்றும் பரிபாடலிலும் உழவர் திருவிழாக்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. பொங்கலைப்பற்றியவரலாற்று ஆதாரம், முதலாம் ராஜேந்திரன் காலத்திலேதான் நமக்குக் கிடைகிறது. முதலாம் ராஜேந்திரன் காலத்து திருவெற்றியூர் கல்வெட்டு, 'புதியீடு விழா' என பொங்கலைக் குறிக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(புதியீடு = முதல் அறுவடை). பொங்கல் உழவர் விழா என்பதை இக்கல்வெட்டுத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. உழவர்விழா தமிழர் விழா மட்டுமன்று ; உலகெங்கும் கொண்டாடப்படும் விழாவும் ஆகும்.

வேளாண்மை பயிர் சாகுபடி செய்வதற்கான காலநிலையைச் சார்ந்து, உலகெங்கும் உழவர் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. பருவகாலம் கணிக்கப்பட்டதும், ஆண்டுகள்கணிக்கப்பட்டதும் வேளாண்மை சார்ந்த நிகழ்ச்சிகளே. விவசாயகாலக் கணிப்பே இன்று காலண்டர் என நாம் குறிப்பிடும் காலக்குறிப்பேடு.

இயற்கையின் போக்கைக் கூர்ந்து கவனித்து, பருவநிலைமாற்றங்களைக் கணித்து உரியகாலத்தில் பயிர் செய்யும் ஆற்றல் வளரமனித குலத்துக்குப் பல ஆண்டுகள் தேவைப்பட்டன. வேட்டையாடித் திரிந்தமனிதன் ஆடுமாடு மேய்த்து அலைந்து திரியும் மனிதனாகமாறிவாழ்வின் பகுதியாக ஆதிவேளாண்மை உருவானது. ஆதிவேளாண்மை முல்லை நிலவிவசாயமாகும். அது ஆற்றங்கரை வேளாண்மையாக வளர்ந்தது. ஆற்றங்கரை வேளாண்மை மருதநில விவசாயமாகும்.

ஆதிவேளாண்மை ஆற்றங்கரை வேளாண்மைக்கு மாறிச் செல்வதில் உற்பத்திக் கருவிகள், நீர்ப்பாசனஆதாரங்கள், வேளாண்மை முறைகள் பெருமளவு மாறின. இப்படி ஏற்பட்டமாற்றங்களில் ஒன்று விவசாய சாகுபடி பற்றியகாலநிலைஅறிவாகும். விதைப்பு, அறுவடைஇரண்டும் மழைக்காலத்தை நம்பியே இருந்தன. நல்ல பருவமழை வேளாண்மைப் பருவத்தை உருவாக்கியது. எனவேதான் மழையைஅடிப்படையாகக் கொண்டே 'வருஷாதி' நூல்கள் எழுந்தன. (வருஷமழை : வருஷித்தல் பொழிதல்).

ஆறுகளுக்குக் கரைகளும் அணையும் கட்டப்பட்டு, மருதநில வேளாண்மை நிலைத்த வேளாண்மையாகமாறியது. முல்லை நிலங்களில் ஏரிகள் குளங்கள் வெட்டப்பட்டு, கலப்பை பெருமளவு பயன்படுத்தப்பட்டபிறகு தமிழகத்தில் முல்லைநில வேளாண் பருவகாலமும், மருதநில வேளாண் பருவகாலமும் ஒருங்கிணைக்கப்பட்டன.

இரு வகைப்பட்ட வேளாண்மையையும் ஒருங்கிணைத்து, அதன்மூலம் பேரரசுகளை நிறுவிய போக்கு தமிழகத்தில் சோழர் காலம் தொடங்கி, பல்லவர் காலம் வரைநடைபெற்றது.பல்லவர் காலத்தில் ஏரிகளும் குளங்களும் வெட்டப்பட்டன. கலப்பைபயன்பாடு விரிவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர் காலத்தில் மருதநில மேம்பாடு செய்யப்பட்டதோடு, மருதநில முல்லைநில விவசாயம் ஒருங்கிணைக்கப்பட்டன. இதற்குரியவகையில் அரசு அமைப்பு மேம்படுத்தப்பட்டது. "நாள் தோறும் விழா கொண்டாடும் உழவர்" (புறம் 282) என்ற நிலைமாறி, தை முதல்நாளை மையமாகக்கொண்டு, வேளாண்மை ஆண்டு தொடங்கப்பட்டு, அறுவடைத் திருவிழா (புதியீடு விழா) கொண்டாடப்பட்டது. பின்னர் தைப் பொங்கல் இன்றைய வடிவத்தை அடைந்துள்ளது என்பதைத் தமிழக வரலாற்றை ஆராயும் போது தெரிய வருகிறது.

அறுவடைக்குப்பின் புது நெல்லரிசியை பாலிட்டுப் பொங்கலிட்டு உழவர் தமக்குள்ளே பகிர்ந்துண்ணுதலே பொங்கல். இதேமாதிரியானவிழா, தென் ஆப்பிரிக்கா நெட்டலில் (ஜூலு பகுதி) உழவர்கள் கொண்டாடுகின்றனர்.

தமிழ் நாட்டில் பொங்கலிடும் பொழுது புதுப்பானையில் பால் பொங்குவது நல்ல அறிகுறியாகக் கொள்ளப்படுகிறது. பால் நல்ல முறையில் பொங்கி வருவதைச் செழிப்புக்கு அடையாளமாக மட்டும் இல்லாமல் பால் தமக்குரியபங்கு என்ற வகையிலும் குறியீடாகத் தமிழகத்தில் பயன்படுத்தப்படுகிறது. பொங்கல், தை முதல் நாளோடு முடிந்து விடுவதில்லை. பொங்கல் நான்கு நாள்கள்நடைபெறும் திருவிழா. போகிப் பொங்கல், தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் (பாடி(ரி) வேட்டை) என நான்கு நாள்கள்நடைபெறுகின்றன. இந்த நான்கு நாட்களிலும் உழவர்கள் பலப்பல சடங்குகளைச் செய்து, தமது வேளாண்மை வளம்பெற விழா எடுப்பர். இதில் மிகப் பெரும்பகுதிச் சடங்குகள் முல்லை நிலம் சார்ந்த ஆதி வேளாண்மை பற்றிய சடங்குகளே. இதுவும் மருதநில நிலைத்த விவசாயமும் ஒருங்கிணைக்கப்படுவதையே பொங்கல் விழா எடுத்துக்காட்டுகிறது.

நகரங்களில் வாழும் தமிழர்களுக்குப் பொங்கல் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்ற ஆர்வம் மிக அதிகமாக இருக்கிறது. ஆனால் பொங்கலை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கான சூழ்நிலை இல்லை. பொங்கல் திருவிழா பற்றி, மும்பைக் கவிஞர் இரா. சு. மாதவன் தம்முடைய "குயில் தோப்பு" என்ற கவிதை நூலில் மிக அற்புதமாகச் சித்தரிக்கிறார். முதலாவதாக பொங்கலன்று விடுமுறை இல்லை. எனவே பணிக்குச் செல்வதற்கு முன்பு அவசர அவசரமாகப் பொங்கல் கொண்டாடுகின்ற விதத்தை கவிஞர் எவ்விதம் கூறுகின்றார் பாருங்கள்:

அய்ந்நூறு சதுரஅடியில்

வாசல் தெளிக்காம

வளைச்சுக் கோலம் போடாம

புதுப்பானை வைக்காம

புதுநெல்லும் குத்தாம

குக்கரே விசிலடிக்க

என்று கவிதை அருமையாக தொடர்கிறது. புது அரிசி இல்லை; பழைய அரிசியை புது அரிசியாக நினைத்துக்கொள்ள வேண்டும். குக்கரையே புதுப் பானையாக நினைத்து அதில் திருப்தியடைய வேண்டும். குலவை போடுகின்ற பெண்கள் இல்லை. குக்கரிலிருந்து வெளிவருகின்ற விசில் சத்தத்தைக் குர(ல)வை ஒலியாக நினைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறி பொங்கல் வாழ்த்துகளை தெரிவிக்கின்றார். நாம் முன்னுரையில் குறிப்பட்டது போல் பொங்கல் விழா எந்த வகையிலும் நகர வாழ்வோடு தொடர்புடையது அன்று. ஆனால் தமிழர்கள் எந்த நகரத்திற்குச் சென்றாலும் பொங்கலை மறப்பதில்லை ; மறக்கவும் முடியாது. காரணம் என்னவென்றால் பொங்கல் விழா தமிழர்கள் வாழ்வோடு மட்டுமன்று; உணர்வோடும் ஒன்றிய விழாவாகும்.

■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் அறிமுகம் — காவியன்

# வியக்க வைக்கும் பிரபஞ்சம்




இலக்கிய ஆய்வு நூலுக்கான 'தமிழியல் விருது-2011' என்ற பரிசைப் பெற்ற நுணாவிலூர் கா. விசயரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட 'வியக்க வைக்கும் பிரபஞ்சம்' என்ற அறிவியல் நூலொன்று அண்மையில் வெளிவந்துள்ளது. வியக்க வைக்கும் பிரபஞ்சம்! இது நாம் அனைவரும் ஒப்பும் ஓர் உண்மை. வியப்பு என்பது அறிவினால் அளவிட முடியாது எனும் உணர்வும், உணர்வினால் உணர்த்திட முடியாது எனும் அறிவும் ஒருசேரத் திரண்ட திகைப்பு எனலாம்.

இந்நூலில், கதிரவன் மண்டலம் அன்றும் இன்றும், பிரபஞ்சம், விண்மீன்கள், சூரியன், நிலாக்கள், ஒன்பது கோள்களாகிய புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, விண்மம் (யுறேனஸ்), சேண்மம் (நெப்டியூன்), சேணாகம் (புளுட்டோ), பிரபஞ்சத்துக்கும் அப்பால், வான் கங்கை, நான்கு வேறுபட்ட சூரியன்களின் ஒளி பெற்றுப் பவனி வரும் ஒரு புதிய கோள் ஆகியவை பற்றிப் பேசப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இவைகள் அனைத்தும் வான்வெளித் தொடர்பு பற்றிய செய்திகளாகும். மேலும் இவைகள் யாவும் முழுக்க முழுக்க அறிவியல் சார்ந்தனவாகும்.

சூரிய குடும்பத்திலுள்ள ஒன்பது கோள்களில் முதல் ஆறு கோள்களாகிய புதன், சுக்கிரன் (வெள்ளி), பூமி, செவ்வாய், வியாழன், சனி ஆகியவற்றிற்குத் தமிழ்ப் பெயர்கள் அமைந்துள்ளன. மற்றைய மூன்று கோள்களாகிய யுறேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகியவற்றிற்குத் தமிழ்ப் பெயர்களின்றி ஆங்கிலச் சொற்கள்தான் பாவனையில் இதுவரை இருந்துள்ளன. இவற்றிற்கான தமிழ்ப் பெயர்களை முறையே விண்மம், சேண்மம், சேணாகம் என்று பாவனைப்படுத்தி முதல் அடி எடுத்து வைத்துள்ளார் ஆசிரியர்.

பிரபஞ்சம் உருவான அறிவியல் முறைகளும், அதில் அடங்கிய அனைத்தும் விரிவாகத் தரப்பட்டுள்ளன. பிரபஞ்சம் விரிவடைந்த வண்ணம் உள்ளது. இந்தவெளியை 'விசும்பு' என்றும், 'அகலிரு விசும்பு' என்றும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் இலக்கியங்கள் கூறியுள்ளன. உலகத் தோற்றத்தினை 'நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்று தொல்காப்பியர் வானியல் பேசியுள்ளார். இதே கருத்தினைப் புறநானூறும் கூறியுள்ளது.

கணக்கிட முடியாத விண்மீன்கள் வானில் நிறைந்துள்ளன. இவற்றின் தொகையை நூறு (100) பிரமகற்பம் (முக்கோடி) என்றும், அதிகமான விண்மீன்கள் நீண்ட காலமான நூறு கோடியிலிருந்து ஆயிரம் கோடி ஆண்டுகள் வரை வாழக்கூடியன என்றும் வானூலார் கூறிய செய்திகளும் உள்ளன.

சூரியன் பிறப்பு, வயது, விவரம், வாழ்ந்த காலம், சூரியன் ஆற்றும் சேவை, சூரியன் இன்றேல் உயிரினங்கள் இல்லை, உலகமும் இல்லை, இன்னும் அவன் 550 கோடி ஆண்டுகள் உயிர் வாழ்வான் என்ற பற்பல செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

நிலாவின் தோற்றம், அதன் பிரகாசம், விவரங்கள், சந்திர கிரணம், நிலாவின் ஈர்ப்புச் சக்தி, கதிரவன் மண்டலத்திலுள்ள 176 நிலாக்கள், சூரிய மண்டலத்துக்கு அப்பாலுள்ள பிரபஞ்சத்தில், நூறு ஆயிரம் கோடி நிலாக்கள் உள்ளன போன்ற செய்திகள் மக்களைக் கவரக் கூடியதாகவுள்ளன.

திரு. மீ. ராஜகோபாலன் (மீ.ரா) அவர்களின் அணிந்துரையும், அவர் உவந்தளித்த அட்டைப்பட ஓவியமும் இந்நூலை மேலும் அலங்கரித்து நிற்கின்றன.

இந் நூலைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

K. Wijeyaratnam,
35, Southborough Road,
Bickley, Bromley, Kent.
BR1 2EA

Telephone No. 020 3489 6569
E-mail :- wijey@talktalk.net
Price per copy:- £3.00 + postage charges.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் மடல்




மார்கழி மாத இதழில், ஆசிரியர் தலையங்கத்தில் திருவேம்பாணியின் மகிமைபற்றி தந்த விளக்கம் மனதுக்கு இதமாக இருந்தது 17 வருடங்கள் தொடர்ந்து, திருவெம்பாவை திருவிழாவில் இலண்டன் லூசியம் சிவன் கோவிலில் சிறப்பாகக் கொண்டாடிய சிவனந்த சோதி அவர்கள் கடந்த மூன்று வருடங்களாக அதை நிறுத்திய காரணத்தைக் கேட்டதும் சைவப்பெருமைகளான பதிப்பாசிரியர் அவர்கள் மீது பரிதாபமாக இருந்தது.

சைவசமயத் தொண்டனாகிய சிவானந்தசோதி அவர்கள் தன்னையும், தன்குடும்பத்தையும் அவரைச் சார்ந்த நண்பர்களையும் நன்நெறிக்குட்படுத்துவதில் மிகுந்த அக்கறையுடையவர். லூசியத்தில் சிவன் ஆலயம் எழுந்தருளுவதற்கு உறுதுணையாக நின்ற சைவ நெறியாளர்களில் முக்கியமானவர் இத்திருக்கோவில் இன்று பிரகாசமாக எழுந்தருளி என்னைப்போன்ற அடியார்களை ஈர்த்துக் கொண்டமைக்கு ஆரம்ப காலத்து தொண்டர்களின் அயராத உழைப்பு என்றால் மிகையாகாது இவ்வாலயத்தின் வளர்ச்சி, சைவத்தொண்டர்களின் திரு.சிவானந்த சோதி போன்றவர்களின் ஒத்துழைப்பிலும் தங்கியுள்ளது. ஆலய நிர்வாகத்துடன் அதிருப்தி இருந்தால் அதைப்பேசித் தீர்ப்பதைத் தவிர்ந்து விலகிப் போவது சைவத் தொண்டர்களின் பின்புக்குரிய இலட்சனமல்ல.

இவ்வாலயத்துடன் தொடர்பில்லாமல் இருப்பது திரு சிவானந்த சோதியர்களின் அடிமனத்தில் ஆழமாகப் பதித்துவிட்ட கிவேசம் என்பதை அவர் அடிக்கடி தொடர்புபடுத்தும் சிவன் கோவில் பற்றிய சர்ச்சை வெளிக்காட்டுகிறது.

குளிக்கப்போய் சேறுபூசிக் கொண்டது போல, தன்னை ஆளாக்காமல் தொடர்ந்தும் திருவெம்பாவை திருவிழாவை கேட்டுப் பெற்று அதை அவரது குடும்பத்துடன் சிறப்பாக வழியாக வழிபாடு செய்ய எல்லாம் வல்ல அருணாச்சலப் பெருமாள் வழிவகுக்க வேண்டுகிறேன்.

நன்றி. வணக்கம்

உமா மகாலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சூரியன்கள் ஒளிகுடித்த நிலாச்சோலை

இசாக்

எப்போதோ நிகழ்ந்தது
இப்போது நடந்ததைபோல
பசுமையாக நினைவில்

தமிழோசை
அரங்கேற்றம் அலுவகத்திற்கு
அருகெதிரில்
73 அபிபுல்லா சாலை

தான் இயக்கவிருந்த
“உள்ளேன் அய்யா” தொடக்கப் பணியில்
அண்ணன் அறிவுமதி
மூழ்கியிருந்த தருணம்
“உள்ளேன் அண்ணா” என
தம்பியாகி நெருக்கமானேன்.

பல துறைகளில்
இப்போது வெளிச்சப்பட்டுவிட்ட
பல முகங்கள்
அங்கே
அங்குமிங்கும்
அலைந்துத்திரிந்த பரபரப்பு.

முன்னோடி படைப்பாளிகள்
“தம்பி” என்றும்
துளிர் படைப்பாளிகள்
“அண்ணா” என்றும்
அன்பு தெளித்து
அழகுத் தமிழ் வரைந்த
சாரல் வீசும்
தொன்ம வாசல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெட்டு ஏர் பிடித்து
ஒழுங்குமாறாமல்
சொல்கள் தூவி
நல்லத் தமிழ்ப் பாடல்களை
விளைவித்த நிலம்.

நூல்கள்
புதிய வடிவில்வர
உறவுகள் கூடி
இரவுகளைத்திண்று
இலக்கிய விருந்து
சமைத்த பொழுதுகள்.

தாய்மைத் ததும்பும் அன்பும்
ஆத்திரம் மிக்க கொள்கைக் கோபமும்
சமவிகிதத்தில்
பரிமாறப்பட்ட
உன்னதக்கூடம்.

வயதில் முதியவரெனில்
"வாங்க அண்ணா" என்றும்
இளையவரெனில்
"வாங்க தம்பி" என்றும்
உள்ளே அழைத்து
உறவாக்கிக்கொள்ளும்
உயிர்ப்பிழியும் தமிழ்க்குரல் ஒலிக்கும்
அற்புத அறை

அண்ணை
தம்பிகளைப் பிரசவித்த
அதிசய
வைத்திய சாலை
73 அபிபுல்லா சாலை.

பொருள்களையும் மனிதர்களையும்
வழியனுப்பிவிட்டு
நினைவுகளையும் உணர்வுகளையும்
நிறைத்துக்கொண்ட
189 அபிபுல்லா சாலையில்
அசையா உயிராகவும்
அப்பழுக்கற்ற உறவாகவும்
எங்களில் கலந்திருந்த
பூவரசும் வேப்பமும்
இப்போதும்
நிழல் தர காத்திரும்
இளைப்பாற
ஆயத்தமா?

29, திசம்பர் 2013






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மானுடக் குரல் இன்குலாப் நேர்காணல்கள்"

## நூல் வெளியீட்டு விழா



"மனுசங்கடா,நாங்க மனுசங்கடா, உன்னைப்போல என்னைப்போல எட்டுஜானு உசரமுள்ள மனுசங்கடா" "நாங்க எரியும் போது எவன் மசுரு புடுங்க போனிங்க" என்று ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களின் தேசிய கீதம் பாடலை எழுதிய அய்யா இன்குலாப் அவர்களின் நேர்காணல் நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

மக்கள் பாவலர் இன்குலாப் அவர்களின் நேர்காணல் நூலை தோழர் இசாக் மிக சிறப்பாக தமிழ் அலை சார்பாக தொகுத்துள்ளார்.

இன்குலாப் அவர்கள் சிறு வயதிலிருந்து இன்று வரை தான் கொண்ட கொள்கை மாறாமல் வஞ்சிக்கப்படுகிற ஒடுக்கப்படுகிற மக்களின் பக்கம் நின்று போராடி வருகிறார். தலித் இஸ்லாமியர் உரிமைகள்,திராவிட கொள்கைகள்,சாதி மத வெறி, மார்க்சிய கொள்கைகள் போன்றவற்றை மிக அழமாக பேசியும் எழுதியும் உள்ளார்.

"மானுடக் குரல் இன்குலாப் நேர்காணல்கள்" நூல் வெளியீட்டு விழா 12.01.14 அன்று சென்னை பெனின்சுலா ஹோட்டலில் நடைபெற்றது. தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் தலைமையில்

தோழர் தொல்,திருமாவளவன் அவர்கள் வெளியிட

பேராசிரியர் பிரபா. கல்விமணி அவர்கள் முதல்பிரதி பெற்றுக்கொண்டார். தொடர்ந்து இயக்குநர் சீனு ராமசாமி அவர்கள் சிறப்புப்பிரதி பெற்றுக்கொண்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









மேலும் டாக்டர் சேதுகுமணன் சார்பில் சோகா இகெதா கல்லூரி பேராசிரியைகள் நூல்களைப்பெற்று சிறப்பித்தனர்

தோழர் இளவேனில் அவர்கள் தொகுப்பு குறித்து கருத்தை வழங்கினார். நடிகர் நாசர் நிகழ்ச்சி ஆரம்பத்தில் கலந்துக்கொண்டு கவிஞர் இன்குலாப், தோழர் நல்லக்கண்ணு, தோழர் இளவெனில் இவர்களிடத்தில் உரையாடல் செய்துவிட்டு முக்கியமான வேலையின் காரணமாக சென்றுவிட்டார்.

நிகழ்வில் கவிஞர் இன்குலாப் அவர்களோடு உரையாடலுக்கும் ஒருங்கிணைக்கப்பட்டது

தோழர் அமீர் அப்பாஸ் தொகுத்து வழ்ங்கினார் தோழர் ஷாநவாஸ் நன்றி கூறினார்

நிகழ்வின் இறுதியில் மக்கள் பாவலர் அவர்களுடன் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.பலரின் கேள்விகளுக்கு பதில் சொன்ன பாவலர் மோடி அலை வீசுவதாக நம்புகிறிர்களா என எழுச்சி தமிழர் கேட்டார் உடனே நம்புகிறவர்கள் மோசம் போவார்கள் என்று பாவலர் பதில் சொன்னார்.எட்டு மணி நேரம் வேலை என்ற நிலை இன்று இல்லையே என்று ஒருவர் கேட்டார் அதற்க்கு (information technology) தகவல் தொழிநுட்ப துறை வேலைகளின் மூலம் உரிமை பறிக்கப்பட்டு உள்ளது நீங்கள் போராடி தான் பெறவேண்டும் என்றார்.

எனக்கு "போராடுங்கள்" என்று சொல்வதை தவிர வேறொன்றும் தெரியவில்லை என்றார்.

**தஞ்சை இக்பால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வ.க்.இராமநாதன்**
சைவ முன்னேற்ற சங்கம் (UK)

# செயற்கரிய செய்த பெரியார்

திருவள்ளுவப் பெருந்தகை செயற்கரிய செயலர் பெரியார் என்று கூறுகின்றார். அண்மையின் சிவபதம் அடைந்த எனது அருமை நண்பர் யான் அன்புடன் தெய்லா என்று அழைக்கும் அமரர் பொன் தெய்வேந்திரம் அவர்கள் செயற்கரிய செய்தார் எனவே அவர் பெரியார் ஆவர்.

உயர்ந்த மனிதப் பன்புகளின் உறைவிடமாய் தனது 75 ஆம் ஆண்டு அகவை நிறைவு செய்து இறைவன் திருவடி அடியில் சேர்ந்த என் நண்பர் இந் நாட்டில் ஈலிங் பகுதியில் இன்று நல்லதொரு ஆலயம் அமைவதற்கு வித்திட்டவர்.

தான் பிறந்த நாட்டில் ஆதரவற்ற தமிழ் அனாதை குழந்தைகள் பலருக்கு புது வாழ்வு வழங்கி கடந்த 27 ஆண்டுகளுக்கு மேலாக உரும்பிராயில் "கருணை கல்யம் அமைத்தும், மற்றும் ஈழத்தின் வடக்கு கிழக்கு பகுதிகளில் பல சிறுவர் அனாதை இல்லங்களுக்கு எம் மக்களிடம் எந்நேரமும் புன்முறுவலோடு உதவி கோரிய பல கலை நிகழ்வுகளை நடத்தி நிதி சேர்த்து பல நூற்றுக்கணக்கான குழந்தைகளை பராமரித்து வந்த பெரியார் ஆவர்.

அமைதியான, ஆடம்பரமற்ற இனிய,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈகையுணர்வுள்ள, உறுதியான, ஊக்கமான, எளிமையான ஏற்றமிகு ஐக்கியமான, ஒற்றுமையதன, ஓர்மயற்ற ஔவை மொழியை போற்றி வாழ்ந்த இப் பெரியாரின் சீரிய வாழ்க்கை எமக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இவருடன் மிகவும் நெருக்கமாக பழகவும், பேசவும் வாய்க்கப்பெற்ற குடும்பங்கள் எமது குடும்பம் ஒரு தனச் சிறப்பை பெற்றுள்ளது. என்பது மிகைப்படாக் கூற்றாகும், இவரும் சரி இவரது அருமை பாரியார் வசந்தமாகவு சரி, மக்களும் சரி எங்களுடன் தேனுடன் கலந்தபாலாக பரிவுடன் இதுவரை வாழ்ந்து வந்துள்ளமை இரு குடும்பகும் பெற்ற பெரிய வெற்றியாகும்.

அமர் தெய்லா அவர்களுடைய சொல்லானது நட்பாயேற்றுக் கொண்டாரைப் பின் வேறுபடாமற் பிணிக்கும் வழுவின்மை சுருங்குதல் விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் என்றில்லை முதலிய குணங்களை அவாலிமற்றைப் பகையாய் ஏற்றுக் கொள்ளாதாரும் பின் அப் பகைமையை ஒழித்து நட்பினை விரும்பும் வன்மையுடையது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (05-01-2014) லண்டனில் நடைபெற்ற அவரது இறுதி யாத்திரை வைபவம் எம் மக்கள் அவர் கடந்த பல ஆண்டுகளாக ஆற்றிய தன்னலமற்ற சேவையை எவ்வளவு தூரம் மதித்தது போற்றியிருக்கின்றார்கள். என்பதற்கு ஒரு சான்றாக அமைந்திருந்தது.

நிலைபேறு இல்லாத சில உலகில் நிலைபெற வேண்டும் என்று கருதுகின்றவர்கள் தம் புகழை இல் உலகில் நிறுவிவிட்டு தாங்கள் மறைந்து போகின்றார்கள். பெரியாரின் நாமம் என்றும் இவ் நாட்டிலும் ஈழநாட்டிலும் என்றும் ஒலிக்க அவர் ஸ்தாபித்த ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலயமும் தமிழ் ஆநாதைகள் அறக்கட்டளையும் சான்றாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவை மு. தயாளன்



# சில மனிதர்களும் சில நியாயங்களும்

"சரி அது இருக்கட்டும். எங்கடை பாதுகாப்பை நாங்களே அழிச்சம். எங்கடை இண்டைய நிலைமைக்கு நாங்கள்தான் காரணம். அதைப்பற்றிக் கதைச்சால் இண்டு முழுக்கக் கதைக்கலாம் அதாலை எங்கடை விசயத்தை இப்ப கதைப்பம். ஆரணி என்னவாம். ஆரந்தப் பொடியன். அந்தப் பொடியனைக் கட்டினால் அவள் ஏதோ செத்துப் போவாள் என்று அம்மா கத்திறாள்"

என்று அவர் சொன்னபோதுதான் அம்மாவின் நிலப்பாடு இவர்கள் இருவருக்கும் புரிந்தது.

"அப்பா பொடியன் சாரங்கனின்ரை மாமா பையன். குழப்படியான பொடியன்தான். ஆனால் ஆரணி அவனை விரும்புறாளா என்பது யாருக்கும் தெரியாது. அவளைக் கேட்கவும் பயமாயிருக்குது. அம்மா மட்டும் உறுதியாயச் சொல்லிறாள். எங்களைப் பொறுத்தவரை அமைதியாக இதை அணுகுகின்றதுதான் நல்லது போலப்படுகுது."

"இப்ப பொடியன் எங்கை?"

"இவ்வளவு நாளும் உள்ளுக்கையிருந்து இப்பதான் பிணையிலை வெளிவந்திருக்கிறான். நாங்கள் இன்னும் கதைக்கையில்லை. அம்மா கொஞ்சம் அமைதியாயிந்தால்தான் நல்லது."

"உள்ளுக்கை இருந்தவன் என்டால் அவ்வளவு மோசமான பொடியனே."

"அப்பா திரும்பவும் சொல்லிறன். எங்கள் இரண்டு பேருக்கும் தெரியாது. எல்லாம் கேள்விப்பட்டதுதான். இந்த நாட்டிலை கனக்க இளம் தமிழ்ப்கொடியள் உப்பிடிக் கெட்டுப்போய்தான் இருக்கிறான்கள்."

"ஓம் ஓம் நாங்கள் அங்கை பேப்பரிலை பார்க்கிறனாங்கள். ஆனால் இவ்வளவு மோசம் எண்டு நினைக்கவே இல்லை."

"சரி இப்ப ஆனந்தி சட்டப்படிப்பு முடிச்சிட்டாளே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"போனமாதம்தான் கவீயெட முடிஞ்சது. அதுக்கிடையிலை இப்படியொரு பிரச்சினை."

அப்போது தொலைபேசி மணி அடித்தது.

தொலைபேசியில் வந்தது ஆதியின் அம்மா.

"சொல்லம்மா?"

"அப்பா வந்திட்டாரே."

"ஓம் வந்திட்டார் கதைக்கப்போறியளே."

"இல்லை நான் இப்ப உங்கை வாறன். ஆனந்தி இப்பதான் வெளியிலை போனவள். அவள் வாறதுக்கிடையிலை நான் உங்கை வந்துட்டு வந்திடுறன்.

"சரி அம்மா நீங்கள் வாங்கோ"

என்று சொல்லிவிட்டு தொலைபேசியை வைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசியை வைத்தாள்.

"அம்மா இஞ்சை வாறாவாம். அப்பா நீங்கள் வள யைப் பார்த்துக் கொண்டிருங்கோ. நான்

தொலைபேசியில் வந்தது ஆரணிதான்.

ஆரணியின் குரலில் கோபமிருந்தது. ஆதி எதுவும் கதைக்கவில்லை.

"அப்பா வந்திருக்கிறாரே?" ஆதி பதிலளிக்கவில்லை.

"என்ன உன்னைத்தான் கேட்கிறன். கொப்பர் வந்திருக்கிறாரே"

"உனக்குத் தெரியுமெண்டால் பிறகேன் கேட்கிறாய்" ஆதியின் பதிலில் உள்ள வெப்பம் மகேந்திரத்துக்குப் புரிந்தது. சாரங்கனுக்கும் புரிந்தது.

ஆரணி வைத்துவிட்டாள். ஆதியும் வைத்துவிட்டு தகப்பனைப் பார்த்தாள்.

அவர் எதுவும் கூறவில்லை. ஆதி சொல்லாமலே எல்லாம் அவருக்குப் புரிந்தது.

ஏற்கனவே ஆரணிபற்றிய சில விடயங்கள் அவருக்கும் தெரிந்திருந்தது.

அவர் இப்போ வந்திருப்பதும் அதற்காகத்தான்.

" என்னவாம் ஆரணி ? " மெதுவாகக்கேட்டார்.

"என்ன வழக்கம்போல சத்தம்தான்."

"ஆரணியைப் பற்றி அம்மா எல்லா எழுதினவ. இதுவரை காலத்திலை உங்களைப்பற்றி எந்த விசயத்தையும் அம்மா எனக்கு அறிவிச்சதில்லை. இந்த முறை மட்டும்தான் அறிவிச்சிருக்கிறா. நிச்சயமாய் விசயம் கொஞ்சம் சீரியசாய்தான் இருக்கவேணும். நான் வந்ததுக்கு அதுவும் ஒரு காரணம்தான்." என்று அவர் கூறியபோது ஆதி தன் புருவங்களை உயர்த்தி அவரைப் பார்த்தாள். அவளைக் கவர்நத விடயம் அவர் தான் வந்ததற்கு அதுவும் ஒரு காரணம்தான் என்று அதுவும் என்ற சொல்லை அழுத்திச் சொன்னதுதான்.

சாரங்கனைப் பார்த்தபோது அவனின் முகத்திலும் அந்த ஆச்சரியம் தொனித்ததை ஆதி அவதானிக்கவும் செய்தாள்.

"நீங்கள் வந்ததுக்கு வேறை காரணமும் இருக்குதோ அப்பா என்று கேட்டாள்."

சிறிது நேரம் எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தார்;.

பின்பு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு "இன்டைய நாட்டு நிலைமையும் ஒரு காரணம். போர் நடந்த காலத்தைவிட இன்றைக்கு உயிருக்கு உத்தரவாதம் கொஞ்சமும் இல்லை. எந்த நேரம் என்ன நடக்குதெண்டு தெரியேல்லை. சட்டம் கொஞ்சமும் இல்லை. ஜனநாயகம் கொஞ்சமும் கொஞ்சமும் இல்லை. வெளியிலைபோனால் திரும்ப வருவம் எண்டதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை." என்று சொல்லிவிட்டு களைத்துப்போய் எல்லாரையும் பார்த்தார். ஆதியும் சரவணனும் வாயடைத்துப்போய் இருந்தனர். ஒரு நீதிபதியின் வாயிலிருந்து வந்த வார்தைகள் சத்தியப் பிரகாசம் கொண்டு நின்றன.

ஒரு அற்புதமான நாடு எவ்வளவு சீரழிந்து போய்க் கொண்டிருக்கிறது.

சமைக்கப்போறன்."

என்று கூறிவிட்டு அவள் சமைக்கப் போய்விட்டாள். சாரங்கன் பத்திரகையை எடுத்து நாட்டு நடப்பை அறிவதற்கான முயற்சியில் இறங்கினான்.

( இன்னும் வரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்மாழ்வார்

♦ லட்சக் கணக்கானோருக்கு இயற்கை விவசாயப் பயிற்சி கொடுத்த நம்மாழ்வார், இயற்கை விவசாயம்பற்றிக் களமிறங்கிக் கற்றுக்கொண்டது பாண்டிச்சேரி ஆரோவில்லில் இருக்கும் பெர்னார்டுவிடம்தான். மேற்கத்திய நாடுகளின் விவசாய முறைகள், அங்குள்ள இயற்கை விவசாயம்குறித்த நிறைய புத்தகங்களை நம்மாழ்வாருக்கு அறிமுகம்செய்து வைத்தவரும் இவரே.

♦ பாரம்பரிய விதை ரகங்களை அதிகம் நேசித்தவர் நம்மாழ்வார். அதைப் பற்றிப் பேச்சு வரும்போதெல்லாம், மத்திய நெல் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநராக இருந்த ராதேலால் ஹெர்லால் ரிச்சார்யாவைக் குறிப்பிட்டுப் பேசுவார். ரிச்சார்யா இந்தியாவின் 22,972 பாரம்பரிய நெல் ரகங்களை வெளிநாடுகள் கைக்குச் செல்லாமல் பாதுகாத்தவர். அதனாலேயே தனது பணியையும் இழந்தவர். ரிச்சார்யா மற்றும் இயற்கை விஞ்ஞானிகளின் கோரிக்கைகளைப் புறந்தள்ளி, அத்தனை பாரம்பரிய நெல் ரகங்களையும் பன்னாட்டு நிறுவனமான ஸின்ஜெண்டாவிடம் 2003ல் அரசு ஒப்படைத்தபோது, கண்ணீர்விட்டு அழுதார் நம்மாழ்வார்.

♦ நம்மாழ்வாரை அதிகம் ஈர்த்தவை ஜே.சி. குமரப்பாவின் கொள்கைகள். "டிராக்டர் நல்லாத்தான் உழும்; ஆனால் சாணி போடாதே" என்று ஜே.சி. குமரப்பா சொன்னதை நகைச்சுவை ததும்பத் தனது ஒவ்வொரு கூட்டத்திலும் குறிப்பிடுவார் நம்மாழ்வார்.

♦ நைட்ரஜன் சத்துக் குறைவுக்காக யூரியா போன்ற உரங்கள் மண்ணுக்குத் தேவை என்று பலரும் வாதிட்டபோது, நமது பாரம்பரிய உழவுமுறையான பயிர் சுழற்சி உழவு மூலம் இயல்பாகவே மண்ணில் நைட்ரஜன் சத்து அதிகரிக்கிறது என்று முதன்முதலாக நிரூபித்துக்காட்டியவர் நம்மாழ்வார்.

♦ நாடெங்கும் பசுமைப் புரட்சி தீவிரமாகப் பரவிய அதே காலகட்டத்தில், இயற்கை விவசாயம் தொடர்பாகத் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாள் பயணத்தைத் தொடங்கினார் நம்மாழ்வார். அதற்காகத் தான் பார்த்துவந்த அரசு வேலையான மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனப் பணியையும் உதறினார்.

♦ பசுமைப் புரட்சியின்போது அரசு உரங்களை ஊக்குவித்துக்கொண்டிருந்த காலம் அது. நம்மாழ்வார் கால்நடையாகக் கிராமந்தோறும் சென்று விவசாயிகளைச் சந்தித்தார். உரப் பயன்பாட்டால் மண்ணின் காரத்தன்மை கூடி, அது அளவுக்கு அதிகமான தண்ணீரை உறிஞ்சுகிறது என்பதைச் சிறிய செயல்விளக்கம் மூலம் நிரூபித்துக்காட்டினார் நம்மாழ்வார். இன்றைக்கு இயற்கை விவசாயம்பற்றி தமிழகத்தில் ஓரளவேனும் விழிப்புணர்வு இருக்கிறது என்றால், அதற்கு நம்மாழ்வாரின் படிப்படியான செயல்பாடுகளே காரணம்.

♦ பலரும் நினைப்பதுபோல் நம்மாழ்வார் நவீனத் தொழில்நுட்பங்களுக்கு எதிரானவர் அல்ல.பயோடெக்னாலஜியின் அத்தனை பரிமாணங்களையும் விரல் நுனியில் வைத்திருப்பார் நம்மாழ்வார். இது அவரது வானகம் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்பவர்களுக்கு நன்கு தெரியும். மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் மூலம் மண்ணுக்கு, மனிதனுக்குக் கேடு ஏற்படும் என்பதால்தான் நம்மாழ்வார் எதிர்த்தார்.

♦ கேடு விளைவிக்கும் மரபணு மாற்றுப் பயிர்களை எதிர்த்த நம்மாழ்வார், நமது பாரம்பரிய ஒட்டுரகங்களை ஆதரித்தார். இவரது வழிகாட்டுதலில் ஒரு புதிய ஒட்டு எலுமிச்சை ரகத்தையே உருவாக்கினார் புளியங்குடி அந்தோணிசாமி.

♦ ஆப்பிரிக்காவின் மடகாஸ்கர் நெல் நடவு என்பது உலக அளவில் பிரபலமானது. ஒற்றை நாற்று நடவு அல்லது செம்மை நெல் சாகுபடி என்றழைக்கப்படும் மடகாஸ்கர் நெல் நடவு 1960களில் வெளியே தெரிந்தது. ஆனால், விதை, நீர், நேரம் அனைத்தையும் குறைத்து, மகசூலை மட்டும் அதிகமாகக் கொடுத்த ஒற்றை நாற்றுநடவை உலகுக்கே அறிமுகப்படுத்தியது தமிழர்கள்தான் என்ற உண்மையை ஆதாரங்களுடன் எடுத்துரைத்தவர் நம்மாழ்வார். இன்றைக்குத் தமிழகத்தில் ஒற்றை நாற்று நடவு பிரபலமாகி, ஏக்கருக்கு 27 மூட்டைகள் வரை நெல் மகசூல் ஈட்ட முடிகிறது என்றால் அதற்குக் காரணகர்த்தா நம்மாழ்வாரே!

♦ 1960 மற்றும் 70களில் கலப்பின ரகங்கள் இந்தியாவுக்குள் ஊடுருவும் முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன. அப்போது கலப்பினங்களைப் பற்றிப் படித்தவர்கள், அனுபவம் வாய்ந்த விவசாயிகளிடையேகூடப் பெரிதாக விழிப்புணர்வு இல்லை. அந்த நேரத்தில் "கலப்பினம் மற்றும் வீரிய ரகங்கள் என்று சொல்லப்படுபவையெல்லாம் உற்பத்தியைப் பெருக்குவதற்காக அல்ல; மாறாக, ரசாயன உரங்களை விற்பனை செய்வதற்கான அரசியலே பசுமைப் புரட்சி பெயரிலான கலப்பின ஊக்குவிப்பு" என்று அன்றே சொன்னார் நம்மாழ்வார்.

♦ நம்மாழ்வார் வேளாண் விஞ்ஞானி மட்டும் அல்ல... மிகச் சிறந்த சுற்றுச்சூழலியலாளரும் ஆவார். மேற்குத்தொடர்ச்சி மலையின் சோலைக்காடுகள் அழிவை எதிர்த்துக் கடைசி வரை போராடினார். சோலைக்காடுகள் இல்லை எனில், ஆறுகள் உற்பத்தி கிடையாது.சோலைக்காடுகள் இல்லை எனில், மனிதனுக்குச் சோறு இல்லை என்பதைத் தனது பிரச்சாரங்களில் வலியுறுத்திவந்தார்.

♦ நுனி வீட்டுக்கு, நடு மாட்டுக்கு, அடி மண்ணுக்கு தனது எந்த ஒரு கூட்டத்திலும் இந்த வசனத்தைப் பேசத்தவறியதே இல்லை நம்மாழ்வார்.

♦ நம்மாழ்வாரின் தமிழ் பெரும்பாலும் பாமரத் தமிழ்தான். ஆனாலும், தமிழ் இலக்கியம் தொடங்கி ஆங்கில இலக்கியம் வரை அவருக்குப் பரிச்சயம். பெரியாரியம் தொடங்கி மார்க்சியம் வரைக்கும் பாமரத் தமிழில் சொன்னால்தானே ஏழை விவசாயிக்குப் புரியும் என்பார்.

♦ விவசாயிகளிடம் சென்று பப்பாளி, கொய்யா, வாழை, நாவல் போன்றவை பயிரிடுங்கள் என்பார். தனது கூட்டங்களிலும், "ஆப்பிள் அரை கிலோ 60 ரூபாய். அதைவிட அதிகம் சத்து இருக்கிற கொய்யா அஞ்சு கிலோ அம்பது ரூபாய். எதைச் சாப்பிடப்போறீங்க?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நமது பாரம்பரியப் பழங்களையே வலியுறுத்துவார். ஆப்பிள், ஆரஞ்சு போன்ற அந்நியப் பழங்களைச் சாப்பிடுவதையும் இயன்றவரை தவிர்த்தே வந்தார்.

♦ பி.டி. கத்திரியை இந்தியாவில் அறிமுகம் செய்யலாமா என்று அன்றைய மத்திய சுற்றுச்சூழல்அமைச்சராக இருந்த ஜெய்ராம் ரமேஷ் நடத்திய கருத்துக்கேட்புக் கூட்டங்களில் தனது பிரதிநிதிகளை அனுப்பி பி.டிக்கு எதிராகப் பேசச் செய்தார் நம்மாழ்வார். அதேபோல் நம்மாழ்வாரின் நண்பர்களான அரச்சலூர் செல்வம், டாக்டர் சிவராமன் ஆகியோர் அன்றைக்குத் தமிழக முதல்வராக இருந்த கருணாநிதியிடம் நேரில் சென்று பி.டியின் கேடுகளை எடுத்துச் சொல்லி, தமிழகத்தில் அதற்குத் தடை உத்தரவும் பெற்றனர்.

♦ தொடக்கத்தில் சுற்றுச்சூழல், இயற்கை விவசாயம் தொடர்பாகப் பல்வேறு அமைப்புகள் தனித்தனியாக இயங்கிவந்தன. ஆனால், நம்மாழ்வார் ஆசைப்பட்டதாலேயே பூவுலகின் நண்பர்கள், ரிஸ்டோர், தமிழ்நாடு வணிகர்கள் சங்கம், பெண்கள் இணைப்புக் குழு, இந்திய நல்வாழ்வு நல்லறம் உள்ளிட்ட ஏராளமான அமைப்புகள் ஒன்றிணைந்து பாதுகாப்பான உணவுக்கான கூட்டமைப்பு 2008ல் தொடங்கப்பட்டது.

♦ 1990களில் ஊடக விளம்பரங்கள், பன்னாட்டு நிறுவனங்களின் பிரச்சாரங்கள் எனத் துரித உணவுக் கலாச்சாரம் இந்தியாவை மென்று தின்றுகொண்டிருந்தது. அப்போது இத்தாலி நாட்டில் நடந்த துரித உணவுக்கு எதிரான ஒரு பயிற்சி முகாமில் கலந்துகொண்டு திரும்பிய நம்மாழ்வார், இங்கு ஆரம்பித்ததுதான் 'ஸ்லோ ஃபுட் மூவ்மெண்ட்'. இன்றைக்கு, பளபளக்கும் பல்பொருள் அங்காடிகளில் கெலாக்ஸ்களுடன் நமது பாரம்பரியத் தானியங்களான சாமையும் கம்பும் போட்டிபோட முடிகின்றன என்றால், அதற்குக் காரணம் நம்மாழ்வாரே!

♦ தனது வாழ்நாளில் அலோபதி மருத்துவத்தை வேண்டாம் என்று ஒதுக்கியவர், கடந்த மூன்று ஆண்டுகளாக அக்குபஞ்சர் மருத்துவத்தில் ஆர்வம்காட்டினார். அதில் நிறையக் கற்றுக்கொள்ளும் முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தார்.

♦ நம்மாழ்வாருக்கு நல்ல குரல் வளம். வயலில் இறங்கிவிட்டால் பாட்டு தானாக வந்துவிடும். பட்டுக்கோட்டையாரின் தத்துவப் பாடல்கள், பாரதியின் 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்?' போன்றவை அவர் அடிக்கடி ராகமிட்டுப் பாடும் பாடல்கள்.

♦ நம்மாழ்வார் பகலில் பெரும்பாலும் உறங்குவது இல்லை. அவர் துயில் எழுந்தால் அது அதிகாலை 4.30 மணி என்று உறுதியாகச் சொல்லலாம். எழுந்ததும் வேப்ப மரப்பட்டையால் பல் துலக்கிவிட்டு, தலைகீழாக நின்று சிரசாசனம் செய்வார். பிறகு, மூச்சுப் பயிற்சி. அதன் பின்தான் அவரது வழக்கமான அலுவல்கள் தொடரும்.

♦ கடைசி வரை இளைஞர்களை அதிகம் நம்பினார் நம்மாழ்வார். கரூர் மாவட்டத்தில் இருக்கும் அவரது வானகம் பண்ணையில் சுமார் 6,000 இளைஞர்கள் இயற்கை விவசாயப் பயிற்சியை முடித்திருக்கிறார்கள்.

♦ காந்தியைப் போன்றே மேலாடையைத் துறந்தவர் நம்மாழ்வார். கடைசிவரை தனது கொள்கையில் உறுதியாக இருந்தவர், கடும் பனிக்காலத்திலும்கூட சட்டை அணிய மாட்டார்.

♦ வாழ்நாளின் பெரும்பாலான நாட்களைப் போராட்டங்களிலும் பயணங்களிலுமே செலவிட்டார். எங்கு சென்றாலும் பேருந்து, ரயில் என பொதுப் போக்குவரத்தையே பயன்படுத்தினார்; மற்றவர்களுக்கும் அதையே வலியுறுத்தினார். அவரது நண்பர்கள், நலம்விரும்பிகள் அவருக்கு கார் வாங்கித் தர முன்வந்தும் "என்னால முடிஞ்சவரைக்கும் சூழல் கேட்டைக் குறைச்சுக்குறேனே" என்று தவிர்த்துவிட்டார்.

♦ அவர் தனது வாழ்க்கைத்துணை சாவித்திரியை 50 ஆண்டுகளில் ஒருமுறைகூட ஒருமையில் அழைத்தது கிடையாது. "வாங்கஞ் போங்க" என்று மரியாதையுடன்தான் அழைப்பார்.

டி.எல். சஞ்சீவிகுமார்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழ்க



தமிழ் மொழியில் ஆர்வமுள்ள இருவர் சந்தித்தனர். அவர்கள் ஒன்றாகப் பயணம் செய்தபோது அவர்களிடையில் நடந்த ஓர் உரையாடல் சிந்தனைக்குரியதாக இருந்தது. அதை இங்கே தருகிறேன். வாசகர் படித்தபின் தம்முடைய மனதுக்குள் சரி, பிழைகளை ஆராயலாம்.

முதலாமவர்: நான் முத்தமிழ் விழா நடத்த யோசிக்கிறேன். நாங்கள் இருக்கும் இடத்திலே விழாக்கள் அதிகம் நடப்பதில்லை. ஒரு நாலைந்து பேர் சேர்ந்து நடத்தலாம். செலவுக்கு நான் பொறுப்பு. அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இரண்டாமவர்: ஏன் விழா நடத்த யோசிக்கிறீர்கள்?

முதலாமவர்: தமிழைப் பேணவும் என் ஆத்மதிருப்திக்குமாகச் செய்ய நினைக்கிறேன்.

இரண்டாமவர்: எனக்கு அதில் உடன்பாடில்லை. விழா எடுப்பதால் மட்டும் இந்த நாட்டில் தமிழ் வாழும் என்று நினைக்கிறீர்களா?

முதலாமவர்: என்ன, நீங்களே இப்படிச்சொன்னால்?

இரண்டாமவர்: அநுபவம். அதனாற் சொல்கிறேன். ஒரு விழாவுக்குப் போனேன். அங்கே மிகத் தாமதமாக, விழாத் தொடங்கி ஒருமணி நேர நிகழ்வுகள் முடிந்தபோது, ஒரு தந்தை தன் பிள்ளையோடு வந்தார். மகன் பிறந்தநாள் விழா ஒன்றுக்குப் போகவேண்டும். அவரின் பேச்சை அடுத்ததாகப் போடுங்கோ என்று விழா அமைப்பாளரிடம் அதட்டிக்கேட்டார். அமைப்பாளரும் பயந்து அடுத்ததாக நிகழ்ச்சியைப் போட்டார். அந்த எட்டு வயதுப் பையன் அடுக்கு மொழியிலே இராமாயணம், திருக்குறள், பாரதி பாட்டு என்று பல பாடல்களிலே மேற்கோள் காட்டி அபிநயத்துடன் பேசினார். அழகான பேச்சு. பெரிய கைதட்டலும் கிடைத்தது.

முதலாமவர்: பார்த்தீர்களா? எவ்வளவு திறமை? அதுவும் எட்டு வயதில்!

இரண்டாமவர்: அங்கேதான் நீங்கள் தவறாகச் சிந்திக்கிறீர்கள். பேசிய பையனுக்கு, தான் என்ன பேசினேன் என்று தெரியாது. தந்தைக்கோ பிறந்தநாட்கொண்டாட்டம் முக்கியம். மகனுக்காக அல்ல, தனக்காக. நேரத்துடன் போனால்மட்டுமே பானம் அருந்தவும் உணவு உண்ணவும் முடியும். பிந்தினால் 'அது' முடிந்துவிடும். இப்படி இன்று பல பெற்றோர். எந்த விழாவுக்கு வந்தாலும் தன் மகன் அல்லது மகள் நிகழ்ச்சி முடிந்ததும் போய்விடுவார்கள். ஏதாவது ஒரு காரணம் இருக்கும். மற்றவர் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதுமில்லை, ஆதரவு கொடுப்பதுமில்லை. விழாவுக்கு வந்தால் மனைவிக்கும் நுழைவுச்சீட்டு எடுக்கவேண்டுமே என்று மனைவியை அழைத்து வருவது மில்லை. இப்போ சொல்லுங்கள்! இதுதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் வளர்க்கும் முறையா?

முதலாமவர்: நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் ஒருசிலர் செய்கிறார்கள் என்று எல்லோரையும் குறைசொல்லலாமா?

இரண்டாமவர்: ஒருசிலர்தான் ஒழுங்காக வருவார்கள். பலர் வருவதில்லை. அதுதான் உண்மை. இன்னொரு வேடிக்கையையும் நான் சொல்லவேண்டும். வரும் பிள்ளைகளின் பெயர்தான் அந்த வேடிக்கை. தமிழ், தமிழ் என்கிறார்கள். ஆனால் விழாவிலே கலந்துகொள்ளும் பிள்ளைகள் பலருக்குத் தமிழ்ப் பெயரே இல்லை. ஒரே குடும்பத்தில் இரு பிள்ளைகள் என்றால் ஒரே மாதிரி ஒலிக்கும் பெயர்கள் வைப்பார்கள். பொருளோ, தமிழ்ச் சாயலோ அந்தப் பெயரில் இருக்காது. வடமொழிப் பெயர் வைக்கக்கூடாது. ஆனால், பொருளற்ற பெயர் வைக்கலாம்!

முதலாமவர்: அதை நானும் பல இடங்களிலே பார்த்திருக்கிறேன்.

இரண்டாமவர்: இன்னும் சிலவருடங்கள் போனபின் பிள்ளைகள் தமிழ் பேசுவது குறைவாகவே இருக்கும். ஆங்கிலம் மட்டுமே பேசுவார்கள். அதுபோல ஐரோப்பிய நாடுகளிலே வாழும் சிறுவர் அந்தந்த நாட்டு மொழியே பேசுவார்கள். அதனால் மொழியால் அவர்களை அடையாளம் காணமுடியாது. பெயராவது தமிழில் இருந்தால் ஓரளவு அடையாளம் காட்டும். உதாரணம் ஒன்று சொல்கிறேன். சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் மொரீசியஸ் நாட்டு மனிதர் ஒருவரைச் சந்தித்தேன். அவரின் பெயர் சமிநடன் என்று சொன்னார். ஓ! சாமிநாதனா? என்று கேட்டேன். அவர் அதுதான் தன் பெயர் என்றார். இப்போ சொல்லுங்கள். அவரை ஒரு தமிழர் என நான் அடையாளம் காணவைத்தது அவரின் பெயர் அல்லவா?

முதலாமவர்: உங்கள் ஆதங்கம் விளங்குகிறது. நான் பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை, நண்பர் ஒருவர் தன் பிள்ளைகளுக்குப் பெயர் வைத்துள்ளார். கேட்டாற் சிரிப்பீர்கள். சொன்னால் ஆரென்றும் உங்களுக்குத் தெரிந்துவிடும். தன் பெயரின் முன்பாதியையும் மனைவி பெயரின் பின்பாதியையும் சேர்த்து முதலாவது பிள்ளைக்கும் மனைவி பெயரின் முன்பாதியையும் தன் பெயரின் பின்பாதியையும் சேர்த்து இரண்டாவது பிள்ளைக்கும் வைத்திருக்கிறார். பொருள் விளங்காத பெயர்கள் அவை. தமிழே அல்ல. வேறு மொழிபோல ஒலிக்கும்!

இரண்டாமவர்: நல்லவேளை, அவருக்கு மூன்றாவது பிள்ளை பிறக்கவில்லை. பிறந்திருந்தால்....... முதலாமவர்: பிறந்தால் என்ன?

இரண்டாமவர்: என்ன? விளங்கவில்லையா? பெயருக்கு என்ன செய்வது? இருவரின் பெயரும் வைத்தாகிவிட்டதே!

முதலாமவர்: பக்கத்து வீட்டுக்காரரின் பெயரை இரவல் வாங்கவேண்டியதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதுரை



## உண்மையான உறவினர்

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

**பா**லானது காய்ச்சப்பட்டாலும் சுவையில் குறையாது. சங்கானது சுடப்பட்டாலும் நிறங்குறையாமல் வெண்மை நிறத்தையே கொடுக்கும். (இவைபோல) உயர்குடியில் பிறந்த மேலோர் செல்வத்தால் குறைந்தாலும் குணத்தால் மேலோராகவே இருப்பார். நண்பராவதற்குத் தகுதியற்றவரோ நிலைமையோடு கலந்து எவ்வளவு நாள் சேர்ந்திருந்தாலும் நண்பராக ஆகமாட்டார். (பாலும் சங்கும் மேன்மக்களுக்கு உவமை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்

## வழங்கும்

## மாதம் இரண்டு திருக்குறள்



உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

மகிழ்ச்சி பொங்கிடச்
சேர்ந்து பழகுவதும்,
பிரிந்திட நேரும் போது
மனங்கலங்குவதும்
அறிவிற் சிறந்தோர் செயலாகும்.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

ஒரு தலைமுறையில்
பெறும் கல்வி அறிவானது,
ஏழேழு தலைமுறைக்கும்
பாதுகாப்பாக அமையும்.




இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்

**விலை. 2 பவுண்ட் மட்டும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமதி யோகா தில்லைநாதன்

## 21வது ஆண்டாக நடாத்தும்

# கானக்குயில் 2014

**நாள் : 28.6.2014 - 6.00 மணிக்கு**

போட்டியில் பங்குபெற உங்கள்
விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## பால கானக்குயில்

12 வயதிற்குள்

## இளைய கானக்குயில்

16 வயதிற்குள்

## கானக்குயில்

17 வயதிற்கு மேல்

விண்ணப்ப முடிவு திகதி : 1 மார்ச் 2014

போன் : **02034898309** செல் : **07903327708**

Email : **arumthill@hotmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KRISHNA

YOUR LOCAL SUPER MARKET

*Freshness - Value - Choice*

## BUY 1 GET 1 FREE ITEMS

| | |
|---|---|
| Btm / Niru / Suryaa tin fish | - £1.99 |
| Mottakarupan arisi / Oorkuthu arisi 5kg | - £7.99 |
| Ponni arisi 5kg | - £8.99 |
| Jay brand rice flour / steam flour 3.6kg | - £7.99 |
| Parotas - 99p | |
| Suryaa curry powder 900g | - £6.99 |
| Idayam oil 1 litre | - £5.99 |
| Suryaa all flour items 1kg | - £1.99 |
| Niru red raw / oorkuthu arisi 1 kg | - £1.99 |
| Trs / natco red lentils 2kg | - £3.99 |
| Suryaa wheat flour / rus c rice flour 5kg | - £10.99 |

## SPECIAL PRICE ITEMS

| | |
|---|---|
| Small Onion / Aubergine | - £1.99/Kg |
| Keerai items | - £2.99/kg |
| Villa meen | - £6.99/kg |
| Thirali meen | - £6.99/kg |
| Prawns | - £8.99/kg |
| Maggi coconut powder 1kg | - £4.99 |
| Kings curry powder 900g | - £3.99 |
| Niru / Yalee / diamond; frozen fish - 2 for | - £5.50 |
| Easy cook rice 5kg | - £3.99 |
| Apna basmati 20kg | - £15.99 |
| Tilda basmati rice 20 kg | - £27.99 |

**MORE THAN 200 OFFERS IN STORE UNTIL 31 DEC 2013**

> spend over £50 - free nestomalt
> spend over £100 - free 5kg rice
> spend over £200 - free pressure cooker 1.5 litre



To receive free gifts : Certain offer items, Alcohol & Tobacco purchases will be excluded from the total spend.

Terms & Condition Apply

## Krishna Cash & Carry

704 - 708 Uxbridge Road
Hayes
Middlesex
UB4 0RX

T - 0208 848 1250
E - info@krishnaz.co.uk
W - www.krishnaz.co.uk

**More than 200 offers in store for a limited time only!**

Terms & Conditions will apply.. please ask in store!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org